GODDependence
True freedom is being dependent on God
செய்தி மடல்

டிசம்பர் | 2025



# ஒரு கிறிஸ்மஸ் செய்தி
## அசாத்தியமானவைகள் அவருக்கு சாத்தியம்

இயேசுவின் பிறப்பு பற்றிய செய்திகள் மத்தேயு மற்றும் லூக்கா ஆகிய நற்செய்தி நூல்களில் தனித்துவமான முறையில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவை ஒன்றொன்று முழுமையாக்குகிறதும் மற்றும் தனித்துவமான விவரங்களைத் தருகிறதும் வெவ்வேறு கதாபாத்திரங்கள் மற்றும் இறையியல் கருத்துகளுக்கு முக்கியத்துவம் தருகிறதாகவும் இருக்கின்றன. மத்தேயு இயேசுவை இராஜாவாகவும் லூக்கா அவருடைய தாழ்மை மற்றும் தேவ தயவு ஆகியவற்றை சுட்டிக்காட்டி எழுதுகின்றார். இயேசுவின் பிறப்பு பற்றிய நற்செய்தி நூல் விவரங்களை நாம் எத்தனை முறை வாசித்தாலும் நமக்கு சலிப்பு தட்டுவதில்லை. மாறாக, அவைகளை வாசிக்கும்போது நம் கண்களை இயேசுவை நோக்கிப் பார்க்கச் செய்ய நம்மை உற்சாகப்படுத்துகிற ஒரு புதிய சிந்தனை, ஒரு புதிய ஆவிக்குரிய பலம் ஆகியவற்றை நாம் பெறுகிறோம். மத்தேயு மற்றும் லூக்கா நற்செய்தி நூல்களின் முதல் இரண்டு அதிகாரங்களை வாசிக்கையில், பின்வரும் மூன்று கேள்விகள் என் கவனத்தை ஈர்க்கின்றன:

1. **இதை நான் எதினால் அறிவேன்? (லூக்கா 1:18)**
2. **இது எப்படியாகும்? (லூக்கா 1:34)**
3. **யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? (மத்தேயு 2:2)**

தேவனுடைய குணாதிசயமும் ஆளுமைத் தன்மையும் ஒருபோதும் மாறாததாக இருக்கிறபடியால், தேவனிடத்தில் இருந்து வருகிற தனிப்பட்ட வார்த்தை எதுவாக இருந்தாலும் அது பரிசுத்த வேதாகமத்துக்கு ஒத்ததாகவே எப்பொழுதும் இருக்கும். - ஜேன் ஹப்

சகரியாவும் எலிசபெத்தும் மிகவும் நல்லவர்களாகவும் நீதியுள்ளவர்களாகவும் இருந்தும், பிள்ளையற்றவர்களாக இருந்தனர். அவர்களுடைய முதுமை காரணமாக, தங்களுக்குப் பிள்ளைகள் பிறக்கும் என்ற நம்பிக்கையைக் கூட அவர்கள் இழந்திருக்கக் கூடும். அவர்கள் இதைப் பற்றி செய்த ஜெபங்களைக் கூட மறந்துபோயிருக்கலாம். எனினும், தேவன் சகரியாவிடம் தம் தூதனை அவனுடைய ஜெபம் கேட்கப்பட்டது என்றும் அவனுக்கு ஒரு மகன் பிறப்பான் என்றும் அறிவிக்கும்படி அனுப்பினார். இப்படியாக, யோவான்ஸ்நானகனின் பிறப்பைப் பற்றி தேவ தூதன் முன்னறிவித்தான். சகரியா தேவனுடைய ஊழியத்தை செய்கிறவனாக இருந்தும், அவனுக்குச் சொல்லப்பட்டதை அவனால் நம்பமுடியவில்லை. ஆகவே அவன், "**இதை நான் எதினால் அறிவேன்**, நான் கிழவனாயிருக்கிறேன், என் மனைவியும் வயதுசென்றவளாயிருக்கிறாளே" எனக் கேட்டான். அவர்களுடைய மனதிலும் சரீரங்களிலும் அவர்களுக்கு நடைபெற சாத்தியமே இல்லை எனத்தோன்றினபோதிலும், கர்த்தருக்கு வழியை ஆயத்தம்பண்ணும்படி இயேசுவுக்கு முன் வந்தவனான யோவானை அவர்களுக்கு மகனாக தேவன் கொடுத்தார். நம்புவதற்கு ஏதுவில்லாதிருந்தும், கிழவனான சகரியாவும், மலடி என்னப்பட்ட எலிசபெத்தும் அவர்களுடைய ஜெபங்களுக்காக பதிலைப் பெற்றனர்.

அடுத்ததாக, மிகவும் இளம்பெண்ணான மரியாளைப் பற்றி நாம் வாசிக்கிறோம். அவள் யோசேப்புவைத் திருமணம் செய்வதற்கு நிச்சயம் செய்யப்பட்டிருந்தது. தேவதூதன் அவளுக்கு முன்பாக தோன்றி இயேசுவின் பிறப்பைக் குறித்து முன்அறிவித்தபோது, அவள் கேட்ட கேள்வி நியாயமானது மற்றும் புரிந்துகொள்ளக்கூடியது: "**இது எப்படியாகும்?** புருஷனை அறியேனே." எனினும், "தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை" எனக் கூறி தேவதூதன் அவளுடைய உறவினராகிய எலிசபெத் கர்ப்பந்தரித்திருப்பது குறித்து சொன்னபோது, மரியாளின் உடனடி பதில் என்னவெனில், "இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது" என்பதே. வேறுவார்த்தைகளில் கூறுவதானால், மற்றவர்கள் என்ன சொல்வார்கள் அல்லது நினைப்பார்கள் என்பதைக் குறித்து கவலைப்படாமல் மரியாள் தேவனுடைய திட்டத்திற்கு "ஆம்" என சொல்லி அதை ஏற்றுக்கொண்டாள். அதுமட்டுமல்ல, எலிசபெத்தை வாழ்த்துவதற்காக அவள் தீவிரமாக விரைந்து சென்றாள். மரியாளின் வாழ்த்துதலைக் கேட்டதும் எலிசபெத்தின் வயிற்றில் இருந்த குழந்தை பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டது. அப்போது எலிசபெத் மரியாளை வாழ்த்தினாள். அதன்பின், மரியாள் தேவனை உயர்த்தி துதிக்கும் பாடலைப் பாடுவது பற்றி நாம் வாசிக்கிறோம். அவள் தாமதமின்றி தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறவளாகவும், மற்றவர்களின் புகழ்ச்சியை ஏற்றுக்கொள்வதற்கு தயங்குகிறவளாகவும் இருந்தாள் (லூக்கா 1:28,29, 42-45). மரியாள் தேவனுக்கு எல்லா மகிமையையும் கனத்தையும் கொடுத்து அவருடைய நாமத்தை துதித்தாள் (லூக்கா 1:46-56). மரியாள் "பாக்கியவதி" என்று வேதம் சொல்கிறதைக் காண்கிறோம் (லூக்கா 1:45).

பெத்லகேமில் இயேசு பிறந்தபின்பு, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் அவரைப் பணிந்துகொள்ள வந்தது பற்றி நாம் வாசிக்கிறோம். அவர்கள் நேராக எருசலேமிற்குச் சென்று, “யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் **எங்கே?**” என்று கேட்டார்கள் (மத்தேயு 1:2). ராஜாவாகப் பிறக்கிறவர் ஒரு அரண்மனையில்தான் பிறந்திருப்பார் என்று நினைத்து, ஏரோது ராஜாவிடம் அவர்கள் சென்றார்கள். அவர்களை வழிநடத்தி வந்த நட்சத்திரத்தை அவர்கள் எவ்வளவு காலம் பின் தொடர்ந்து வந்தார்கள் என்பது நமக்குச் சொல்லப்படவில்லை. அவர்கள் புதிதாகப் பிறந்த ராஜாவைப் பணிந்துகொள்ள வந்திருந்தனர். ஆனால், அந்த ராஜாவைப் பணிந்துகொள்வதற்கு அவர்கள் தவறான இடத்திற்குச் சென்றிருந்தனர். தவறான இடத்தில் அவர்கள் கேட்ட சரியான கேள்வி ஏராளமான அப்பாவி குழந்தைகளைக் கொல்வதற்கு காரணமாக நேரிடலாம் என்பதை அவர்கள் ஒருபோதும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.அவர்களுடைய பயணத்தில் ஒரு சிறிய இடைவெளிக்குப்பின், இயேசு இருந்த இடத்திற்கான வழிநடத்துதலைக் கண்டுகொண்டு, அங்கே அவர் முன் தாழ்மையாக விழுந்து பணிந்துகொண்டார்கள். தாவீது ராஜாவின் வம்சத்தில் இயேசு பிறந்தாலும், தன் ஜனங்களையும் நாட்டையும் எதிரிகளிடம் இருந்து காப்பாற்றுகிற அரசராக அவர் பிறக்கவில்லை. அவர் ஒரு அரசரை விட மேலானவர். ”தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பதற்காக” இயேசு பிறந்தார் (மத்தேயு 1:21). அவர் இராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார். ”அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது” (லூக்கா 1:33).

நம்மில் சிலருக்கும் இன்று இதுபோன்ற கேள்விகள் இருக்கக்கூடும்: என் ஜெபத்திற்கு தேவன் பதில்கொடுப்பார் என்று நான் எப்படி அறிவேன்? நான் எவ்வளவு காலம் காத்திருக்கவேண்டும்? நம்புவதற்கு ஏதுவாக எதுவுமில்லாத சூழ்நிலையில், எல்லாம் எதிராக இருக்கும்போது, நடைபெற சாத்தியமில்லாத சூழ்நிலையில் இது எப்படி நடக்கும்? இயேசுவைப் பார்ப்பதற்காக நாம் எங்கே செல்கிறோம்? அனேக கிறிஸ்தவர்கள் இந்த கிறிஸ்மஸ் காலத்தில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருக்கும் குடில்களைப் பார்க்கச் செல்கிறார்கள். தேவனை அறியாத இலட்சக்கணக்கான மக்கள் “கடவுள் எங்கே இருக்கிறார்?” என்ற கேள்வியுடன் புண்ணியஸ்தலங்களில் அவரைத் தேடுகிறார்கள். ”மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும்” என பரிசுத்த வேதாகமம் மிகத் தெளிவாக கூறுகிறது (லூக்கா 18:27). நம் ஜெபங்கள் மற்றும் நம்பிக்கையற்ற சூழ்நிலைகளுக்கான பதிலை இயேசுவில் கண்டுகொள்கிறோம். தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி, அவரைப் பணிந்து தொழுதுகொள்ளும்போது, அவர் நம் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றுகிறார். நம் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் அர்த்தமுள்ளதாகவும், நம்பிக்கையற்றவர்களுக்கு நம்பிக்கை தருகிறதாகவும், வழிதெரியாது திகைத்து அலைந்துதிரிகிற மனிதர்கள் இயேசுவைக் கண்டுகொள்வதற்கு வழிகாட்டுவதாகவும் அமையட்டும்.

-சகோ. அற்புதராஜ் சாமுவேல், பெங்களூரு.

இந்த உலகம் பொய்களும் ஏமாற்றுகளும் நிறைந்தது என்றும் பரிசுத்த வேதாகமத்தில் மட்டுமே உண்மை இருக்கிறது என்றும் நான் சொல்லும்போது அதற்காக வருத்தம் தெரிவிக்க மாட்டேன். ஏனெனில், அது தான் உண்மை. - ஜான் மெக்ஆர்தர்

# ஆசிரியரிடமிருந்து....

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,**

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் GODependence குழுவின் சார்பில் எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த செய்திமடல் மூலம் மீண்டும் உங்களுடன் தொடர்பு கொள்ள தேவன் கொடுத்த இந்த வாய்ப்பிற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

இந்த மாதம் முழுவதும் நாம் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களில் மும்முரமாக இருப்போம். "இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" (லூக்கா 2:10) என்ற தேவதூதனின் வார்த்தைகளே நம் கொண்டாட்டங்களுக்கு மையமாக அமையட்டும்.

**நல்ல செய்தி:** இயேசு பாலகனாக பிறந்த அன்று இரவு தேவதூதன் முதலாவது சொன்ன வார்த்தை உங்களுக்கு நற்செய்தியை அறிவிக்கிறேன் என்பதாகும். கிறிஸ்துமஸ் என்பது மனிதன் தேவனைத் தேடுவதில் அல்ல, தேவன் மனிதனைத் தேடிவந்த ஒரு நல்ல செய்தியை அனுப்புவதில் ஆரம்பிக்கிறது. முதல் கிறிஸ்துமஸ் பிரசங்கம் தேவதூதனால் செய்யப்பட்டது. இன்றும் அதே நற்செய்தி நமக்கு தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தைகள் மூலமாக கிடைக்கிறது. நற்செய்தியைக் கேட்ட மேய்ப்பர்களின் இரவு மாற்றம் அடைந்தது போன்று பரிசுத்த வேதாகமம் நம்முடைய வாழ்க்கையை மாற்றுகிறது. நாம் பரிசுத்த வேதாகமத்தை திறக்கும் ஒவ்வொரு நேரமும் நம்பிக்கை, மன்னிப்பு, வழிநடத்துதல் மற்றும் வாழ்க்கைக்கான நல்ல செய்திகளை நாம் பெறுகிறோம்.

**மிகுந்த சந்தோஷம்:** தேவதூதன் ஒரு சாதாரணமான சந்தோஷச் செய்தியை அறிவிக்கவில்லை. மிகுந்த சந்தோசமான செய்தி. கிறிஸ்துமஸ் மகிழ்ச்சி என்பது பரிசுகள்,ஒளி விளக்குகள் மற்றும் கொண்டாட்டங்களில் கிடைக்கும் சிறிய மகிழ்ச்சியில் அல்ல, இரட்சகர் வந்துவிட்டார் என்ற அறிவினால் நமக்கு உண்டாகும் நிலையான ஆழமான மகிழ்ச்சியாகும். இந்த மகிழ்ச்சியானது பரிசுத்த வேதாகமத்தை அதிகமாக தியானிக்கும் போது இன்னும் வளர்கிறது. எந்த அளவிற்கு அதிகமாக நாம் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கிறோமோ அந்த அளவிற்கு ஆண்டவருடைய இருதயத்தையும் நாம் அறிகிறோம். அப்போது நம்முடைய மகிழ்ச்சி இன்னும் ஆழமானதாக அசைக்க முடியாததாக மாறுகிறது. மேய்ப்பர்கள் முதலில் வார்த்தையைக் கேட்டனர், பின்னர் அதன்படி இரட்சகரை கண்டனர். நாமும் பரிசுத்த வேதாகம வார்த்தைகளை வாசிக்கும் போது அதன்படி செய்யும் போது, அவருடைய பிரசன்னத்தை நாம் அனுபவிக்கிறோம்.

**எல்லா ஜனத்துக்கும்:** 'கிறிஸ்துமஸ்' செய்தியானது எல்லா ஜனத்திற்குமானது என தேவதூதன் அறிவித்தான். எனவே கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் என்பவை ஒரு குழுவினரின் தனிப்பட்ட கொண்டாட்டமோ கலாச்சார நிகழ்ச்சியோ அல்ல. அது ஒட்டுமொத்த உலகத்திற்குமான தேவனுடைய ஈவு. பரிசுத்த வேதாகம வாசிப்பு நம்மை நற்செய்தியின் தூதுவர்களாக மாற்றுகிறது.

அர்ப்பணம் மற்றும் மனத்தாழ்மையுடன் கூடிய எதிர்பார்ப்புடன் வாஞ்சையுள்ள ஆவியுடன் தேவனுடைய வார்த்தையிடம் வாருங்கள். தேவனை அறிந்து கொள்ளவேண்டும் என்ற தீர்மானம் உள்ளவர்களாக இருங்கள். - A. W. டோசர்

பரிசுத்த வேதாகமம் நம்முடைய வாழ்க்கையையும் நம்முடைய நடை உடை பாவனைகளை மாற்றும் போது, நாம் கிறிஸ்துவின் அன்பை குடும்பங்களில், வேலை செய்யும் இடங்களில், சமுதாயத்தில் கொண்டு சேர்ப்பவர்களாக மாறுகிறோம். கிறிஸ்துமஸ் இரவில் மேய்ப்பர்களுக்கு தூதர்களால் ஒருமுறை அறிவிக்கப்பட்ட அதே நற்செய்தி இன்று நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் நினைவு கூறுவோம். நாம் அவருடைய வசனங்களை உண்மையாக வாசிக்கும் போது தேவன் அவருடைய நற்செய்தியை தெளிவு, உண்மை மற்றும் அன்புடனும் மற்றவர்களுடன் கொண்டு சேர்க்க தேவன் நம்மை ஆயத்தம் பண்ணுகிறார்

இந்த வருட சர்வதேச வேதவாசிப்பு தினம் (IDBR 2025) சார்ந்த நிகழ்வுகள் 16 நவம்பர் 2025 அன்று சிறுவர்களுக்கான தொடர் வேத வாசிப்பு நிகழ்ச்சியில் ஆரம்பித்து ஒவ்வொன்றாக பல்வேறு நிகழ்வுகள் இன்று வரையும் நடந்து வருகின்றன. இவை 16 டிசம்பர் வரையும் தொடர்கின்றன. இந்த வருடத்தில் நமது வேத வாசிப்பு சவால்கள் நடைபெறும் பத்து மொழிகளிலும் சர்வதேச வேத வாசிப்பு தின நிகழ்வுகளை முன்னெடுக்க வேண்டும் என திட்டமிட்டு ஆரம்பித்த முயற்சிகள் தேவனுடைய கிருபையால் 9 மொழிகளில் நிறைவேற தேவன் கிருபை செய்தார். 8 மொழிகளில் அந்தந்த மொழி வேதாகமத்தின் வரலாறு குறித்த GODependence கருத்தரங்கங்கள், 6 மொழிகளில் தொடர் வேதவாசிப்பு (Bible Readathon) நிகழ்ச்சிகள் 7 மொழிகளில் Zoom கூடுகைகள் என தொடர்ச்சியாக பல நிகழ்வுகள் நடந்து வருகின்றன.

சர்வதேச வேத வாசிப்பு தினத்தை ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில், குடும்பமாக மற்றும் சபை அல்லது குழுவாக எப்படி அனுசரிக்கலாம் என்பது குறித்த விபரங்கள் இந்த இதழிலும் கொடுத்துள்ளோம். அவற்றில் உங்களால் முடிந்தவற்றை முயற்சி செய்வதன் மூலம் வேதவாசிப்பின் அவசியத்தை நமது அயலர்கள் அறிந்து கொண்டு உணர்வுடைய ஒரு வாய்ப்பு ஆக இருக்கும் என நம்புகிறோம்.

இரண்டாம் ஆண்டில் நமது செய்தி மடல் அதிக உள்ளடக்கத்துடன் புதிய பொலிவுடன் வெளிவர தேவன் ஆசீர்வதித்து உதவி செய்துள்ளார். தொடர்ந்து நமது செய்திமடல்கள் தடையின்றி வெளிவர அநேகருக்கு பிரயோஜனமாக விளங்க ஜெபித்துக் கொள்ளுங்கள்.

GODependence ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். இதன் சேவைகளை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.



**கிறிஸ்துவின் பணியில்,**
**Dr. பேதுரு தேவதாசன்.**

வளமான மற்றும் அர்த்தமுள்ள வாழ்க்கைக்கு பரிசுத்த வேதாகமத்தைக் குறித்த அறிவு அவசியம். - பில்லி கிரஹாம்

# துதி மற்றும் ஜெபக் குறிப்புகள் - டிசம்பர் 2025

## துதிப்போம்:

- 1. 2025 நவம்பர் மாதத்தில் வெற்றிகரமாக தங்கள் வேதவாசிப்பை நிறைவு செய்தவர்களுக்காக மற்றும் டிசம்பர் மாத வேத வாசிப்பு குழுவில் இணைந்து இருக்கின்ற ஒவ்வொருவருக்காக.
- 2. டிசம்பர் 2025 இல் ஒரு மாத வேத வாசிப்பு போட்டியில் இணைந்து வேதாகமத்தை வாசித்து வருபவர்களுக்காக.
- 3. வரவிருக்கும் டிசம்பர் 16, 2025 - சர்வதேச வேதவாசிப்பு தினத்தை முன்னிட்டு திட்டமிடப்பட்ட ஹிந்தி, பஞ்சாபி, மராத்தி, மலையாளம், பெங்காலி, கன்னடம், தமிழ் மற்றும் ஆங்கில வேதாகமத்தின் வரலாறு குறித்து அந்தந்த மொழிகளில் நடந்து முடிந்த Talk Shows பயனுள்ளதாக இருந்ததற்காக.
- 4. இரண்டாம் ஆண்டின் முதல் செய்திமடல் 2025 நவம்பர் மாதம் வெளிவர ஆண்டவர் பாராட்டின கிருபைகளுக்காக.
- 5. பரிசுத்த வேதாகமத்தை வாசியுங்கள், உங்கள் வாழ்வை புதுப்பித்துக் கொள்ளுங்கள். என்ற கருப்பொருளை மையமாக வைத்து டிசம்பர் 16, 2025 - சர்வதேச வேதவாசிப்பு தினம் (IDBR2025) கடைபிடிக்கப்பட இருப்பதற்காக.


## ஜெபிப்போம்:

- 1. 2025 டிசம்பர் -இல் 1 மாத வேத வாசிப்பில் இணைந்து இருப்பவர்கள் அந்த சவாலை வெற்றிகரமாக நிறைவு செய்ய. இதுவரை ஒருமுறை கூட முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்காதவர்கள் கூட 2025 ம் ஆண்டுக்குள் ஒருமுறை வாசித்து முடிக்க.
- 2. புதிய வருடத்தில் பலர் ஒரே நேரத்தில் நமது வேதவாசிப்பு சவால்களில் சேரும்போது, 10 மொழிகளில் வேதவாசிப்பு சவால்களுக்காகப் பயன்படுத்தப்படும் GODependence இன் 3 வாட்ஸ்அப் எண்களும் ஸ்பேம் காரணமாக வாட்சாப்பில் தடுக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கப்பட. தேவன் GODependence குழுவினருக்கும் தேவையான ஞானத்தைக் கொடுக்க.
- 3. டிசம்பர் 16 - சர்வதேச வேதவாசிப்பு தினத்தை முன்னிட்டு திட்டமிடப்படுகின்ற நிகழ்வுகள் ஒவ்வொன்றிலும் தேவனின் செயலாற்றும் கரம் காணப்பட.. இதன் மூலம் அநேகர் வேத வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள.
- 4. வேத தியான குழுக்கள் ஆரம்பிப்பதில் இருக்கின்ற தடைகள் முற்றிலும் நீங்கி புதிய வருடத்தில் மீண்டும் தொடங்கப்பட.
- 5. Kannada மொழி வேத வாசிப்பு சவால் குழுக்களுக்காக இந்த மாதத்தில் பிரத்தியேகமாக ஜெபம் செய்யுங்கள். எதிர்வரும் மாதங்களில் Kannada வேத வாசிப்பு சவாலில் அநேகர் இணைந்து வேதாகமத்தை வாசிக்க முன்வர மற்றும் இதுவரை இணைந்து இருப்பவர்கள் வெற்றிகரமாக சவாலை நிறைவு செய்ய. குழுவின் நிர்வாகிகளாக இருக்கின்றவர்களை ஆண்டவர் பெலப்படுத்தி வழிநடத்த.

தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் தேவனுடைய வார்த்தையை படிப்பதுதான் மிகச் சிறந்த குணநலன்களை உருவாக்கி இருக்கிற இரகசிய ஒழுங்கு ஆகும்.

- ஜேம்ஸ் W. அலெக்சாண்டர்

# திருச்சபைச் சீர்திருத்தத்தின் முழக்கங்கள்




**முழக்கம்: 1. பைபிள் மட்டுமே! - (Sola Scriptura)**

17ஆம் நூற்றாண்டின் எழுப்புதல் வீரர்களில் ஒருவராகிய ஜான் வெஸ்லி அழுத்திச் சொன்னது: ”திருச்சபைதான் திருவசனத்தால் நியாயந்தீர்க்கப்படவேண்டும், திருவசனமானது திருச்சபையால் நியாயந்தீர்க்கப்படக்கூடாது.” பிரியமானவரே, ஆதி, யிலே இருந்தது வார்த்தை, சபையல்ல!

”மறைக்கப்பட்ட ஆகமங்களைப்” பற்றி (Apo- crypha) என்ன? கி.மு. 200க்கும் கி.பி. 100க்கும். இடைப்பட்ட காலத்தில் இந்நூல்கள் எழுதப்பட்டன. திருமறை என்று எவராலும் எப்பொழுதும் இவை ஏற்கப்படவில்லை. ஆனால் இறந்தோருக்காய் ஜெபித்தல் (உத்தரிக்கும் ஸ்தலம்), இறந்தோரிடம் வேண்டுதல், நற்செயல்கள் மூலம் பாவ மன்னிப் படைதல் போன்ற தங்கள் தத்துவங்களை நிலை நாட்டிச் சீர்திருத்தவாதிகளை எதிர்க்க வேண்டும் எனும் எண்ணத்துடன் ரோமன் கத்தோலிக்கர் இந்த ஏழு நூல்களை 1546இல் திருமறையுடன் பழைய ஏற்பாட்டில் இணைத்தனர். ஆனால் பின்னர் ரோமன் கத்தோலிக்கரால் ஏற்கப்பட்ட புதிய ஏற்பாட்டுப் புத் தகங்கள் ஒன்றிலும் ”மறைக்கப்பட்ட ஆகமங்களி லிருந்து” எதுவும் எடுத்தாளப்படவிடல்லை.

பைபிள் மட்டுமே என்று நாம் சொல்லும்போது, கிறிஸ்தவரல்லாத புலவர்கள் மற்றும் நாடக ஆசிரியர்களின் படைப்புகளை நாம் எடுத்தாளலாமா? இவர்களது படைப்புகளில் எவ்வளவுதான் நீதி நெறிகள் சொல்லப்பட்டிருந்தாலும், அவை வெறும் ”அறிவு” (knowledge) தருமே தவிர திருவிவிலியத்தைப் போல ஆத்தும இரட்சிப்புக்கேதுவான ”ஞானம்” (wisdom) தராது (2 தீமோத்தேயு 3:15). கிறிஸ்தவரல்லாதோரின் எழுத்துக்களிலிருந்து அவ்வப்போது மேற்கோள் காட்டுவது தவறல்ல. அத்தேனே நகரிலுள்ள மார்ஸ் மேடையிலிருந்து சிலை வணக்கத் தாருக்குச் சொற்பொழிவாற்றும்போது அப்போஸ்தலன் பவுல் சொன்னது: ”நாம் தேவனுடைய சந்ததியார் என்று உங்கள் புலவர்களிலும் சிலர் சொல்லி யிருக்கிறார்கள்” (அப்போஸ்தலர் 17:28).

”பைபிள் என்ன சொல்லுகிறது” என்பதே நமது முழு வாழ்க்கையின் கோட்பாடாய் இருக்கவேண் டும். இச்சத்தியத்தை வலியுறுத்தும் திருவசனங். களைப் பாருங்கள்: மத்தேயு 21:42, யோவான் 7:38, ரோமர் 4:3, 10:8, 11:2, கலாத்தியர் 4:30, 1 தீமோத் தேயு 5:18, யாக்கோபு 4:5. இறைவார்த்தையாகிய பைபிள்மீது நமது விசுவாசம் அடித்தளப்படாதிருந் தால் கிறிஸ்து கிறிஸ்து மரித்தார், உயிர்த்தார் என்பதெல்லாம் நமக்கு எப்படித் தெரியும்? சிலுவையில் கிறிஸ்து தொங்கும்போது எடுக்கப்பட்ட புகைப்படம் ஏதும் நம்மிடம் உண்டோ? இஸ்ரவேல் நாட்டில் ஒன் றுக்கும் மேற்பட்ட காலிக் கல்லறைகள் உண்டே, இயேசுவை அடக்கம்பண்ணிய கல்லறை எதுவோ?

தேவனுடைய வார்த்தைகளில், தேவனுடைய இருதயத்தில் இருப்பது என்ன என்பதைக் கற்றுக் கொள்ளுங்கள். – பிஷப் கிரகோரி

பைபிள் என்ன சொல்லுகிறது என்பதிலேயே சிலுவை மரணமும், உயிர்த்தெழுதலும் பற்றிய நமது விசு வாசம் சார்ந்திருக்கிறது. கொரிந்து சபையினருக்கு இதைப் பவுல் சரியாய் எழுதினார்: 1 கொரிந்தியர் 15:3,4, "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காய் மரித்து, அடக்கம் பண்ணப் பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்." அவர்களது "இரட்சிப்புக்குக்" காரணமாயிருந்த இதிலேயே அவர்கள் "நிலைத் திருக்க" வேண்டுமென அறிவுறுத்தினார் (வச 1,2). எனவேதான் திருவசனத்தையே பிசாசு பிரதானமாய்த்தாக்குவான். "தேவன் சொன்னதுண்டோ?" என்ற சந்தேகக் கேள்வியை ஏவாளின் மனதில் அவன் எழுப்பினான் அல்லவா? (ஆதியாகமம் 3:1).

ஒரு முறையாவது விவிலியத்தை முழுவதும் வாசித்துள்ள கிறிஸ்தவர் வெகு சிலர் பிரியமானவரே, விவிலியத்தின் 66 புத்தகங்கள் எதிலும் தேவையற்ற வசனப் பகுதிகளே கிடையாது. வம்ச வரலாற்றுப் பகுதிகளிலிருந்தும் கற்கவேண்டியவை உண்டு! "வேத வாக்கியங்கள் எல்லாம் பயனுள்ளவை" எனத் தீமோத்தேயுவுக்குப் பவுல் திட்டமாய் எழுதினார் (2 தீமோத்தேயு 3:16) கிறிஸ்தவ வாழ்வில் இளமையிலிருந்து முதிர்ச்சிக்கு வளர்வது திருவசனத்தின் மூலமாகத்தான் (வச 15, 17), வேதத்தின் ஒரு சில பகுதிகளைத் தியானிக்கத் தவறுவது நமக்குத்தான் பாதகம். "உபதேசம்" மூலமாகவும் "உதாரணம்" மூலமாகவும் தேவன் தமது ஞானத்தைத் திருவசனத்தில் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் (ஏசாயா 8:20), அவரது சிந்தையைப் புரிந்துகொள்ள வேறெதுவும் நமக்குத் தேவையில்லை (வச 19) இறந்தோரிடம் வேண்டுவது இங்கு திட்டமாய்க் கண்டிக்கப்பட்டுள்ளது (வச 19), முழு வேதத்தையும் கிரமமாய் வாசித்து முடிக்க வேதாகம அட்டவணை ஒன்றைப் பயன்படுத்துங்கள். (ஈராண்டுக் காலத்தில் வேதம் முழுவதையும் வாசித்து முடிக்கவும், ஆண் டுக்கு 100 வசனங்களை மனனம் செய்யவும் உதவும் ஒரு திட்டம் பைபிள் அட்டவணை எனும் எனது 60-பக்க நூலில் உண்டு.)

ஓர் அனுபவம் எவ்வளவு ஆன்மீகத் தோற்றம் கொண்டிருந்தாலும் அதின் அடிப்படையில் நாம் இதுவே சத்தியம் என்று சொல்லிவிட முடியாது. அனுபவத்திலிருந்து சத்தியம் என்பதல்ல, மாறாக, எந்த அனுபவத்திற்கும் சத்தியமே உரைகல். திரு மறையில் நேரடியாக, தெளிவாக, போதிக்கப்படாத எந்த அனுபவத்தையும் அங்கிகரிக்க நாம் கடமைப் பட்டவர்களல்ல. Sola Scriptura! பைபிள் மட்டுமே!

விவிலியம் மொழியாக்கப்படாத ஏறத்தாழ 200 இந்திய மொழிகளை இங்கு நினைவுகூருவோம். நமது தாய் மொழியிலேயே, பல்வேறு மொழியாக் கங்களில், பரிசுத்த வேதம் நமது கையிலிருப்பது நமது பொறுப்பைக் கூட்டுகிறது (லூக்கா 12:48). சாமானியர்களும் வாசித்துப் புரிந்துகொள்வதற்காய்ப் பைபிளை லத்தீன் மொழியிலிருந்து ஜெர்மானிய மொழிக்கு மொழியாக்கம் செய்த மார்ட்டின் லூத்தருக்காய்த் தேவனைத் துதிப்போம். ஏராளம் எதிர்ப்புகளின் நடுவில் அவர் இதைச் செய்தார்.

மரித்துப் போன ஆத்துமாக்களை உயிர்பெறச் செய்வதற்கு பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தும் மாபெரும் கருவி தேவனுடைய வார்த்தை. - டி.எல் மூடி

**பாடுங்கள்...**

சத்திய வேதம் பக்தரின் கீதம்
சுத்தர்கள் போகும் பாதையின் தீபம்
உத்தம மார்க்கம் காட்டும்

எத்தனை துன்பம் துயரம் வந்தும்
பக்தனைத் தேற்றிடும் ஔஷதம்
எத்தனை துன்பம் துயரம் வந்தும்
பக்தனைத் தேற்றிடும் ஔஷதம்

நித்தம் விரும்பும் கர்த்தர் வசனம்
சுத்தப் பசும்பொன் தெளிந்திடும் தேன்
இதயம் மகிழும் கண்கள் தெளியும்
இருண்ட ஆத்மா உயிரடையும்

பேதைகளிடம் ஞானம் அருளும்
வேதப் புத்தகம் மேன்மை தரும்
இரவும் பகலும் இதன் தியானம்
இனிமை தங்கும் தனிமையிலும்

வேதப் பிரியர் தேவப் புதல்வர்
'சேதமடையா நடந்திடுவார்
இலைகள் உதிரா மரங்கள் போல
இவர்கள் நல்ல கனி தருவார்

உள்ளம் உதிக்கும் உறுதி அளிக்கும்
கள்ளம் கபடெல்லாம் அகற்றும்
கடிந்து கொள்ளும் கறைகள் போக்கும்
கனமடைய வழி நடத்தும்

கர்த்தர் வசனம் வல்ல சம்மட்டி
கன்மலையையும் நொறுக்கிடுமே
இதய நினைவை வகையாய் அறுக்கும்
இருபுறமும் கருக்குள்ளதே

வானம் அகலும் பூமி அழியும்
வேத வசனம் நிலைத்திருக்கும்
பரமன் வேதம் எனது செல்வம்
பரவசம் நிதம் அருளும்

(சகோதரி சாராள் நவரோஜி, 1938-2014)

தொடரும்..............

**(சகோ. R. ஸ்டான்லி அவர்கள் எழுதிய "நான் நிற்கும் கன்மலை" என்ற நூலில் இருந்து)**

## நமது தரிசனம் & நமது பணித்திட்டம்

**நமது தரிசனம்**

ஜனங்கள் தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான ஞானம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது.

**நமது பணித்திட்டம்**

வேத வசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் உதவ GODependence நாடுகிறது.

நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும். - ஏசாயா 30:21

# வேதவாசிப்பு சவால்கள்

## 01 ஜனவரி 2026 முதல்

**“தேவனுடனும் மற்றும் அவருடைய வார்த்தையுடனும் செலவழிக்கும் ஐந்து நிமிடங்கள் அந்த நாளின் மீதமுள்ள நேரங்களைப் பார்க்கிலும் மதிப்புமிக்கதாகும்.” - ஆஸ்வல்டு சேம்பர்ஸ்**

உங்களுக்கு வசதியான நேரத்திலும் வேகத்திலும் முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நாங்கள், GODependence உங்களுக்கு உதவுகிறோம்.




விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம். - எபிரெயர் 11:3

**நமது வேதவாசிப்பு சவால் பங்கேற்பாளர்கள் சிலரது அனுபவ சாட்சிகள் பின்வருமாறு:**

👩‍💼♀️ "இந்த வேதவாசிப்பு சவால் மிகவும் அருமையான அனுபவம். அதிகாலையில் எழுந்தவுடன் குழுவில் அன்றைய வேதவாசிப்பு பகுதியை தான் பார்ப்பேன். ஒருநாள் கூட Bible வாசிக்கமால் இருந்தது இல்லை. தினமும் Bible வாசித்து அந்த நாளைத் தொடங்கும்போது என்னில் இருந்த தேவையற்ற பயம் எல்லாம் என்னைவிட்டு விலகியது." **– Juliet Balaji**

👨‍💼♂️ "இந்த வேதவாசிப்பு சவால் மூலம் வெகு நாட்களுக்கு பிறகு குறுகிய காலத்தில் (3 மாதங்களில்) வேதத்தை முழுமையாக வாசித்து இருக்கிறேன். நான் வேதத்தை வாசிக்க மற்றவர்களை உற்சாகப்படுத்தி வருகிறேன். ஆனாலும் நாமும் ஒரு காரியத்தை கருத்தாய் கவனமாய் செய்ய வேண்டும் என்பதால் இதனை தேர்வு செய்தேன். உண்மையில் இந்த வேத வாசிப்பு திட்டம் நிறைய காரியங்களை எனக்கு கற்றுக்கொடுத்தது." **– K. Jebajayaraj**

👩‍💼♀️ "பல வருடங்களாகவே நான் வேதாகமத்தை முழுமையாக வாசிக்க முயற்சி செய்து வந்தேன். தேவனுடைய கிருபையால், 6 மாதங்களில் வேதாகமத்தை முழுவதும் வாசித்து முடிக்க முடிந்தது. இது எனக்கு ஒரு கனவு நனவாகிய தருணம். இந்த GODependence வேதாகம வாசிப்பு சவாலின் பின்னால் உள்ள அனைவருக்கும் மனமார்ந்த நன்றி." **– Belsi Arokiamary. J**

### இதன் சிறப்பு அம்சங்கள்:

✷ வேதவாசிப்பு சவாலின் காலம் 1 மாதம் முதல் 1 வருடம் வரை நீங்களே தெரிவு செய்யும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தையும் 1 மாதம் / 2 மாதங்கள் / 3 மாதங்கள் / 4 மாதங்கள் / 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்.]

✷ 10 மொழிகளில், உங்களுக்கு வசதியான ஒரு மொழியில் உள்ள குழுவில் இணைந்து கொள்ளலாம். [தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி]

✷ முந்தின தினம் இரவிலேயே கொடுக்கப்படும் வேதவாசிப்புப் பகுதி.

✷ வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் மேற்கோள்கள் அல்லது காணொளிகள்.

✷ வேதவாசிப்பின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த வாராந்திர, இருவார மற்றும் மாதாந்திர மீள்பார்வைகள்.

# வேதவாசிப்பு சவால்கள்

## 01 ஜனவரி 2026 முதல்

✷ வாசிப்பில் நீங்கள் பின்தங்க நேர்ந்தால், விடுபட்ட பகுதிகளை வாசிக்க வாய்ப்பு! எமது வாசிப்புத் திட்டத்தில் Catch - Up நாட்கள் மற்றும் திட்டங்களை மாற்றிக் கொள்ளுதல் ஆகியவை உண்டு. ஏனென்றால் வாழ்க்கையின் சிரமங்களை நாங்கள் புரிந்துகொள்கிறோம்!

✷ அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள்.

✷ பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (*நிபந்தனைகளுக்குட்பட்டது)

“ எனவே, முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நீங்கள் ஆர்வமாக இருந்தால், உங்கள் வசதிக்காக நாங்கள் வடிவமைத்துள்ள வேதவாசிப்பு சவால்களில் ஒன்றில் சேர்ந்துகொள்ளுங்கள். உங்களுக்கு வசதியான ஒரு காலஅளவுத் திட்டம் மற்றும் மொழி_யைத் தேர்ந்தெடுத்து, அத்துடன் உங்கள் _பெயர் (வேதவாசிப்புச் சவாலை வெற்றிகரமாக முடிக்கும் போது அதற்கான பாராட்டுச் சான்றிதழில் அச்சிடப்பட வேண்டிய விதத்தில்) மற்றும் வயதை இந்த இணைப்பில் https://wa.me/96565962559 கிளிக் செய்து, +965 6596 2559 என்ற WhatsApp எண்ணிற்கு தெரிவிக்கவும்.

நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென். 🙏

-̇ GODependence குழு

CLICK HERE » wa.me/96565962559

**** ☝️ இந்த செய்தியை உங்கள் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் உங்கள் சபை உறுப்பினர்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்... இதனால் அவர்களும் வழக்கமாக வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்திற்குள் வரலாமே! ”

**சர்வதேச வேதவாசிப்பு வாரம் (IDBR Week) - டிசம்பர் 10 முதல் 16 வரை**

இந்த ஆண்டு முதல், டிசம்பர் 16 எந்த நாளில் வருகிறது என்பதைப் பொருட்படுத்தாமல் சர்வதேச வேதவாசிப்பு தின நிகழ்ச்சிகளை எளிதாக நடத்துவதற்காக, இந்த தினத்தை ஒவ்வொரு ஆண்டும் ஒரு சர்வதேச வேதவாசிப்பு வாரமாக (டிசம்பர் 10-16) விரிவுபடுத்த முடிவு செய்துள்ளோம்.

**IDBR 2025 - ன் கருப்பொருள்**

**“பரிசுத்த வேதாகமத்தை வாசியுங்கள்;**
**உங்கள் வாழ்வை புதுப்பித்துக் கொள்ளுங்கள்.”**

நாம் கடைபிடிக்க வேண்டிய நான்கு விதிகள்: முதலாவது, தேவனுடைய வார்த்தையை வாசியுங்கள்; இரண்டாவதாக, தேவனுடைய வார்த்தை உங்களை ஆட்கொள்ளும்வரையிலும் அதை நீங்கள் உட்கொள்ளுங்கள். மூன்றாவதாக, தேவனுடைய வார்த்தையை விசுவாசியுங்கள். நான்காவதாக, வார்த்தையின்படி வாழுங்கள். - ஸ்மித் விகிள்ஸ்வொர்த்

GODependence
True freedom is being dependent on God

# வேத வாசிப்புச் சவால்கள்

## 10* மொழிகளில் 6 விதமான

## வேதவாசிப்புத் திட்டங்கள்

*எமது வேத வாசிப்புச் சவால்கள் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் துவங்குகிறது.

**1 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 45 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
2 மணி 30 நிமிடங்கள்

**2 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 22 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
1 மணி 30 நிமிடங்கள்

**3 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 15 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
60 நிமிடங்கள்

உங்களுக்கு வசதியான வேதவாசிப்புத் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கும் வசதி

**4 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 11 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
45 நிமிடங்கள்

**6 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 7 அல்லது 8 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
25 நிமிடங்கள்

**1 வருட வேதவாசிப்புச் சவால்**
தினமும் 3 அல்லது 4 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
15 நிமிடங்கள்

இன்னும் தாமதம் ஏன்?
இன்றே சேருங்கள்.

தொடர்புக்கு: +965 6596 2559

கீழே கொடுக்கப்பட்ட மாதிரியின் படி வாட்சப்பில் உங்கள் விவரங்களை அனுப்பவும்:
<உங்கள் பெயர்> <வயது> <காலஅளவு> <மொழி>.

*உங்களுக்கு ஏற்ற வேதவாசிப்புத் திட்டம் மற்றும் விருப்பமான மொழியில் எங்கள் வேத வாசிப்புச் சவால்கள் ஒன்றில் நீங்கள் சேரலாம்.

*எங்கள் வேதவாசிப்புச் சவால்கள் ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி மொழிகளில் உண்டு.

நம் மூளையறிவில் சேமித்துவைத்திருக்கும் வசனம் அல்ல, இருதயத்தில் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் வசனமே நம்மைப் பாவத்தில் இருந்து விலக்கிப் பாதுகாக்கிறது. - வன்ஸ் ஹேவ்னர்

GODependence
True freedom is being dependent on God

# Bible Reading Challenges

## GODependence வேதவாசிப்புச் சவால்களில் உள்ள சிறப்புத் தன்மைகள்

1. 1 மாதம் முதல் 1 வருடம் வரையிலான வேதவாசிப்பு காலத்தை வசதிக்கேற்ப தெரிவு செய்து கொள்ளும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தை 1 மாதம் / 2 மாதங்கள்/ 3 மாதங்கள்/ 4 மாதங்கள்/ 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்].
2. உங்களுக்கு விருப்பமான மொழியில் வேதத்தை வாசிக்கும் வாய்ப்பு-10 மொழிகள் (ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி).
3. வேதவாசிப்புப் பகுதி முந்தின தினம் இரவிலேயே பகிரப்படும்.
4. வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் அனுதின மேற்கோள்கள் (Quotes).
5. வேத வாசிப்பில் முன்னேற்றத்தை சுயபரிசோதனை செய்து கொள்ள உதவும் வாரந்தோறும், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை, மற்றும் மாதமொரு முறை என நடைபெறும் மீள்பார்வைகள் (Reviews).
6. தவறிய பகுதிகளை வாசிக்க Catch-Up நாட்கள் மற்றும் தேவைப்பட்டால் வேதவாசிப்பு காலத் திட்டங்களை மாற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு.
7. அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள் - இது வேதவாசிப்புக்கென உள்ள தனித்துவமான குழு.
8. பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது).
9. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எங்கும் எந்த விதமான கட்டணமும் கேட்கப்படாது.
10. தேவனுடைய வார்த்தையுடன் (வேத தியானம், வேத மனனம் மற்றும் வேத ஆராய்ச்சி என) மேற்கொண்டு ஈடுபடுவதற்கான வாய்ப்பு.

**முறையாக மற்றும் முழுமையாக**
**வேதாகமத்தை வாசிக்க மிக அருமையான ஒரு வாய்ப்பு!**

https://www.godependence.com/brc

தேவன் தம் ஜனங்கள் பல வெற்றிகளைப் பெற்றனுபவிக்க காரணமாக இருந்த அவருடைய தயவை அவர்கள் மீது காண்பித்த அநேக உதாரணங்களை பரிசுத்த வேதாகமம் பதிவு செய்கிறது. தேவ தயவு என்பது அவர் மனிதர்கள் மீது காட்டும் கருணைப் பேரன்பு ஆகும். - ஜான் எக்ஹார்ட்

# வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 14

**வேதப்பகுதி: 2 தெசலோனிக்கேயர்**




| | | | | | |
|---|---|---|---|---|---|
| ↓1 | | | ←2 | ↓3 | ■ |
| | | ■ | | | |
| | | | ↓5 | | ↓6 |
| | | | | | |
| 7↑ | 8↑ | 9↑ | | | |
| 10→ | | | | | |

### ➡️ இடமிருந்து வலம்

10. முந்தி நேரிடுவது விசுவாச _____ (4)

### ⬅️ வலமிருந்து இடம்

2. தேவன் நியாயமான____ செய்கிறவர் (4)
4. இயேசு கிறிஸ்துவின் ____ அனைவரோடுமிருப்பதாக (3)

### ⬇️ மேலிருந்து கீழ்

1. சகோதரனாக எண்ணி ____ சொல்லுங்கள் (3)
3. ____தோறும் இதுவே அடையாளம் (6)
5. பரம்பி மகிமைப்படுவது கர்த்தருடைய ____ (4)
6. தேவனை ஸ்தோத்திரிக்க _____களாயிருக்கிறோம் (4)

### 🔼 கீழிருந்து மேல்

7. ஆக்கினைக்குள்ளாக்கப்படுபவர்கள் _____யில் பிரியப்படுகிறார்கள் (3)
8. பிதாவாகிய தேவன் கொடுத்திருக்கிறது நித்திய_____ (4)
9. ____ செய்வதில் சோர்ந்து போகாமலிருங்கள் (3)


**குறிப்பு** : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்கவேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

CLICK HERE https://forms.gle/L1ywGBeuGq6mZLxs6

கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 25/12/2025க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

தேவனுடைய வார்த்தையை வாசித்து ஆராய்ந்து பார்க்க நேரம் ஒதுக்குங்கள். அது உங்களை மாற்றும். - கெய்ல் டேவிஸ்

# செம்மான் அருட்பணியாளராதல்
## வில்லியம் கேரி (1760-1834)



சென்ற மாத இதழின் தொடர்ச்சி ...

**இந்தியாவில் வில்லியம் கேரி:**

கேரி ஒரு மிஷனெரியாக செல்வதற்கான வழி இப்போது திறந்துவிட்டது. ஆனால் எங்கு மிஷனெரியாகச் செல்வது என்ற கேள்வி எழுந்தது. மேற்கு ஆப்பிரிக்கா அல்லது தென் கடல் தீவுகளுக்கு மிஷனெரியாகச் செல்லலாம் என்ற எண்ணம் கேரியினிடத்தில் இருந்தது. ஆனால் ஆண்டவர் கேரிக்காக இந்தியாவைத் தம் மனதிலே வைத்திருந்தார். ஆகவே, டாக்டர் தாமஸ் என்ற ஒரு மனிதனைக் கேரியைச் சந்திக்கும்படியாக அனுப்பினார். டாக்டர் தாமஸ் என்பவர் இந்தியாவில் இருந்தவர். இந்தப் பெருமகனாருடைய வாழ்க்கையின் மூலமாகவும், இருதய பாரத்தின் மூலமாகவும் அதிகமாகக் கவரப்பட்ட கேரி இந்தியாவிற்கு மிஷனெரியாக அவருடன் கூடச் செல்வதற்காக தீர்மானம் செய்து கொண்டார். பாப்டிஸ்து மிஷனெரி சங்கத்தின் தலைவரும் இன்னும் அவரோடு சேர்ந்த ஒரு சிலரும் கேரியைத் தங்களுடைய ஜெபத்தாலும் பொருளாலும் தாங்குவதாக அவரிடத்தில் வாக்குறுதி கொடுத்தனர். மிஷனெரியாக கேரி இந்தியாவுக்கு வந்தபோது அவர் 33 வயது நிரம்பியவராக இருந்தார். ஒரு சில சிக்கல்களைக் கடந்து ஆழமான முறையிலே திருப்பணி பற்றிய திட்டங்களை அவர்கள் வகுத்த பின்னர் வில்லியம் கேரி தன் குடும்பத்துடனும் டாக்டர் தாமஸுடனும் 1793 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13ம் தேதி கப்பலில் ஏறினர். நீண்ட பிரயாணத்திற்குப் பின்பு நவம்பர் மாதத்தில் கல்கத்தாவில் வந்து இறங்கினார்கள். கேரியோடு அவர் மனைவியும், நான்கு பிள்ளைகளும், அவருடைய மைத்துனியும் இருந்தார்கள்.

இந்தியாவின் மக்களைக் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்த வேண்டும் என்ற அவருடைய ஆவல் இவர்களில் யாருக்குமே இருந்ததாகத் தெரியவில்லை. இந்தியா செல்லும் தன்னைத் தாங்குவதற்கு ஒருசிலர் பின்னணியில் இருந்தாலும், தன் கரத்தில் வெகு சொற்ப பணம்தான் இருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் வில்லியம் கேரி அயல்நாடான இந்தியாவுக்குச் செல்வது அவருக்கு ஏதோ புத்தி மாறாட்டம்தான் என்று அவரது நண்பர்களும், உறவினர்களும், எண்ணி கலங்கினர்.

ஆனால் வில்லியம் கேரியோ உறுதியான நம்பிக்கையுடனும், ஆழமான பாரத்துடனும் காணப்பட்டார். தனது நீண்ட கடற்பிரயாணத்திலேயே வில்லியம் கேரி வங்காள மொழியைக் கற்க ஆரம்பித்தார். பிறகு அவர் இந்துஸ்தானி, பாரசீகம், மராத்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் கற்றார். இந்தியா வந்து இறங்கிய உடனேயே அவர் இந்திய மக்களோடு வங்க மொழியில் பேசவும், ஆண்டவருடைய வார்த்தையைப் பிரசங்கிக்கவும், வேத வசனங்களை மொழி பெயர்க்கவும் ஆரம்பித்தார். நிச்சயமாகவே ஆண்டவர் கேரியினைத் தம்முடைய உயர்ந்த திட்டத்திற்காக நடத்தினார். மொழிகளைக் கற்கும் வாஞ்சையை அவருக்குக் கொடுத்தார்.

இந்தியாவில் அவர் வாழ்ந்த முதல் வருடத்தில் அவருடைய குடும்பத்தின் மக்கள் அனைவருமே ஒருவர் பின் ஒருவராக நோய்வாய்ப்பட்டனர். அவருடைய அருமையான ஐந்து வயது மகன் பீட்டர் இறந்து போனான். இந்து, முஸ்லீம் வேலை ஆட்கள் புதைகுழி வெட்ட முன்வரவில்லை. தன்னுடைய சுகவீனத்தில் ஏற்பட்ட பலவீனத்தோடு கேரி தாமாகவே புதைகுழி வெட்டினார். அந்தச் சமயத்தில் இரண்டு பேர் அவருக்கு உதவி செய்ய முன் வந்தனர். அதைக் கண்ட கேரி நன்றிப் பெருக்கோடு கண்ணீர் வடித்தார்.

தன் குடும்பத்தைப் காப்பற்ற ஒரு சாயத் தொழிற்சாலையின் பொறுப்பாளராக கேரி வேலை செய்ய ஆரம்பித்தார். அதுமட்டுமல்ல, வேத வசனங்களை அச்சடிப்பதற்கு ஓர் அச்சுக்கூடமும் ஆரம்பித்தார். வியாபாரத்தில் ஏற்பட்ட நஷ்டத்தினால் குறுகிய காலத்தில் கேரி தனது வேலையை இழந்தார். தொடர்ந்து அவரது அச்சுக் கூடமும் தீக்கிரையானது என்றாலும், இச்சம்பவங்கள் கேரி எந்த விதத்திலும் மனந்தளர்ந்து போகச் செய்யவில்லை. அவருடைய உள்ளத்தில் அடிக்கடி எழுந்த ஒரே கேள்வியானது, ”நான் எவ்வகையில் இந்தியாவுக்கு உதவமுடியும்” என்பதே.

### கடவுள் கேரியை பயன்படுத்திய விதம்:

கேரி ஏழு ஆண்டுகள் கடுமையாக உழைத்தார். அவர் ஊழியத்தின் முதல் கனியான கிறிஸ்னு பால் என்னும் ஒரு தச்சனுக்குக் கேரி ஞானஸ்நானம் கொடுத்தார். ஒரு கிறிஸ்தவனாக மாறுவதற்கு அநேக பாடுகளைக் கடந்து வந்தபோதும் கிறிஸ்னுபால் உண்மையான ஒரு கிறிஸ்தவனாக நிலைத்திருந்தான். அவன் வாழ்க்கையின் மூலமாக இன்னும் பலரை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தினான்.

1798ஆம் ஆண்டு இங்கிலாந்தில் இருந்து இன்னும் நான்கு பேர் வந்து கேரியோடுகூட ஊழியத்தில் பங்குபெற்றார்கள். செராம்பூர் என்ற இடத்தில் அவர்கள் ஒரு பெரிய அருட்பணி மையத்தை ஏற்படுத்தினர். அங்கிருந்து இந்தியாவினுடைய பல பாகங்களுக்குச் சென்று கிறிஸ்துவைப் பிரசங்கித்தனர். மேலும் ஆண் பெண்களுக்காகத் தனித்தனிப் பள்ளிகளை ஏற்படுத்தினர். சிறிய புத்தகங்களையும் வேத புத்தகங்களையும் அச்சிட ஒரு பெரிய அச்சுக்கூடமும் வைத்திருந்தனர்.

1800 ஆம் ஆண்டு செராம்பூர் கல்லூரியினைக் கேரி நிறுவினார். மேலும் ஓர் அனாதை இல்லத்தையும் ஒரு தொழுநோய் மருத்துவமனையையும் ஏற்படுத்தினார். கேரி இந்தியாவில் ஊழியஞ்செய்த 22 ஆண்டு காலத்தில் 765 பேர் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தப்பட்டனர். கேரி மரிப்பதற்கு முன்னால் இந்தியாவில் 26 சபைகள் எழும்பின.

கல்கத்தாவில் உள்ள அரசங்கக் கல்லூரியில் கேரி வங்கமொழி பேராசிரியராக நியமிக்கப்பட்டிருந்தார். பின்னர் சமஸ்கிருதத்தையும், மராட்டியையும் கூட அவர் அதே கல்லூரியில் போதித்தார். 30 ஆண்டுகள் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அவருடைய வருவாயில் பெரும் பகுதியை கடவுளுடைய ஊழியத்திற்கென்றே பயன்படுத்தினார். ஒரு சிறிய பகுதியை மட்டும் தன் செலவுக்காக வைத்துக்கொண்டார்.


புதிய ஏற்பாடு முழுவதும் வங்காள மொழியில் 1800 ஆம் ஆண்டு மொழிபெயர்க்கப்பட்டது. தனது மரணத்திற்கு முன்பாக இவர் புதிய ஏற்பாட்டை நாற்பதுக்கு மேலான மொழிகளிலும், இருபதுக்கு மேலான மொழிகளில் முழு வேதாகமத்தையும் மொழிபெயர்த்திருந்தார். இதன்படி உலகில் மூன்றில் ஒரு பகுதி மக்களுக்கு வேதாகமத்தை மொழிபெயர்த்து கொடுத்தார்.

இவரது வேண்டுகோளுக்கிணங்க, அரசாங்கம் இறந்த கணவனோடு அவனது மனைவியையும் உயிரோடு எரிக்கும் "உடன்கட்டை ஏறுதல்" என்னும் பழக்கத்தை எதிர்த்து, ஒரு சட்டத்தை இயற்றி அதற்குத் தடை விதித்தது. அதுமட்டுமல்ல, உயிர்ப்பலியாக பச்சிளங்குழந்தைகளை கங்கை நதியிலே தூக்கி எறியும் பழக்கமும் தடை செய்யப்பட்டதற்கு இவரே காரணமாய் இருந்தார்.

இப்படியாக மாபெரும் சாதனைகளைப் புரிந்த கேரி தன்னை ஒரு பயனற்ற ஊழியன் என்றும், சிறிதளவே பயன்பட்டவன் என்றும் கூறினார். "நான் மறைந்த பின்பு கலாநிதி கேரியைப் பற்றி நீங்கள் எதுவும் பேசாமல் கேரியின் இரட்சகரைப் பற்றியே பேச வேண்டும்" என்று தன்னுடைய இறுதி நாட்களில் தன்னைச் சந்திக்க வந்த நண்பர் ஒருவரிடத்தில் கூறினார்.

வங்க மொழியில் புதிய ஏற்பாட்டின் 8ம் பதிப்பினை அவர் முடித்தபின்பு தனது 72ம் வயதில் "என்னுடைய வேலை முடிந்தது. ஆண்டவருடைய சித்தத்திற்குக் காத்திருப்பதைவிட இதற்குமேல் இனி நான் செய்வதற்கு ஒன்றும் இல்லை" என்றார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 1834 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அவர் மரித்தார். அவருடைய உடல் தாம் நேசித்த இந்தியாவிலேயே இளைப்பாறுதலுக்காக அடக்கம் செய்யப்பட்டது. தன்னுடைய தாய் நாட்டிற்கு ஒருமுறை கூட திரும்பிச் செல்லாதபடி 41 ஆண்டுகள் அவர் கடுமையாக இந்தியாவிலே உழைத்தார். அவருடைய திருப்பணியின் கனிகளானது இன்றும் நம்முடைய கண்களால் காணக்கூடிய நிலையிலே உள்ளன. இவ்விதமாக திறம்பட அரியதோர் சேவையினைச் செய்த இவரை "இந்திய அருட்பணியின் தந்தை" என்று அழைப்பது மிகவும் பொருத்தமாகும். **(முற்றும்)**

தேவனை நாம் அறிந்து கொண்டு, அவருடனான உறவை அனுபவிப்பதற்கு முன்பு பரிசுத்த வேதாகமத்தில் உள்ள வேத வாக்கியங்கள் ஒரு கதைப் புத்தகத்தில் உள்ள சாதாரணமான வார்த்தைகளாக இருந்தன. ஆனால், நாம் தேவனை அறிந்துகொண்டபோது, வேத வசனத்தைப் பற்றிய நம் எண்ணம் முற்றிலும் மாறியது. - டாம் ஆலன்




## உங்களுக்குத் தெரியுமா?

**மன ஆரோக்கியமும் உடல் ஆரோக்கியமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதைப் பைபிள் ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ளது!**

இந்நவீன காலத்தில், இந்த அறிவு 1948–53 காலத்தில் உலக சுகாதார அமைப்பின் (WHO) முதல் தலைமை இயக்குநராக இருந்த டாக்டர் பிராக் சிசோம் அவர்களுக்கே வழங்கப்பட்டது. அவர் ஒரு மனநல மருத்துவ நிபுணர்; மன ஆரோக்கியமும் உடல் ஆரோக்கியமும் நெருக்கமாக இணைந்தவை என்று நம்பினார்.

அவர் புகழ்பெற்ற ஒரு கூற்றை கூறினார்: “மன ஆரோக்கியம் இல்லாமல் உண்மையான உடல் ஆரோக்கியம் இருக்க முடியாது.”

ஆனால் ஆச்சரியம் என்னவெனில், இந்த உண்மையை பைபிள் கிறி.மு. 9ஆம் நூற்றாண்டிலேயே வெளிப்படுத்தியது!

"மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம்; முறிந்த ஆவியோ எலும்புகளை உலரப்பண்ணும்.”
(நீதிமொழிகள் 17:22, பைபிள்)

உங்கள் உடலையும் மனதையும் படைத்த படைப்பாளரிடமிருந்து கற்க ஆவலாக உள்ளீர்களா?
பைபிளை வாசியுங்கள்.



### உங்களுக்கு தெரியுமா?

மொழியியல் ஆய்வுகள் படி யோபு புத்தகம் ஆபிரகாமுக்குமுன் காலத்தைச்சேர்ந்ததாகும்.



### உங்களுக்குத் தெரியுமா?

பல்வேறு அறிவியல் உண்மைகளை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே வேதாகமம் கூறியிருப்பது உங்களுக்குத் தெரியுமா?
யோபு 26:7 இல் இப்படிச் சொல்லப்பட்டுள்ளது: “அவர் பூமியை அந்தரத்திலே தொங்கவைக்கிறார்”.இது நவீன அறிவியல் சொல்லும் ஈர்ப்பு விசை மூலமாக பூமி விண்வெளியில் தொங்குவது என்ற உண்மையோடு அற்புதமாகப் பொருந்துகிறது.



தேவனுடைய வார்த்தையும் ஆவியும் மட்டுமே சபையில் சீர்த்திருத்தத்தை உண்டாக்கும்.
- W. ராபர்ட் காட்ஃப்ரே

# டிசம்பர் 16 - சர்வதேச வேதவாசிப்பு நாள்
## International Day of Bible Reading

ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 16 அன்று சர்வதேச வேதவாசிப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது. அதற்கு என்ன காரணம்? இது மேரி ஜோன்ஸ் என்ற என்பவரின் பிறந்த நாளாகும். 1784ஆம் ஆண்டு டிசம்பர் 16ல் பிறந்த இவர் பிரிட்டிஷ் மற்றும் வெளிநாட்டு வேதாகம சங்கம் நிறுவப்படுவதற்கு ஒரு முக்கிய காரணமாக இருந்தார்.



இந்த மேரி ஜோன்ஸ் யார்? அவருக்கும் வேதாகமத்திற்கும் என்ன தொடர்பு? வேல்ஸ் நாட்டின் சிறிய கிராமத்தில், ஒரு எளிய ஆனால் ஆழ்ந்த ஆன்மீக நம்பிக்கையுள்ள குடும்பத்தில் மேரி ஜோன்ஸ் பிறந்தார்.

அவருக்கு வாழ்க்கை அவ்வளவு எளிதானதாக இருக்கவில்லை, பொருட்செல்வம் குறைவாக இருந்தது. ஆனால் அச்செல்வங்களை விட மேலான ஒன்று மேரியிடம் இருந்தது. தேவன் மீதான அன்பு நிறைந்த ஒரு இருதயம் உள்ளவளாக அவர் இருந்தார்.

சிறு வயதிலேயே சுயமாக வேதாகமத்தைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை மேரி வளர்த்துக் கொண்டார். ஆனால் அந்த நாட்களில், குறிப்பாக அவர் மொழியாக இருந்த வேல்ஷ் மொழியில், வேதாகமங்கள் கிடைப்பதற்கு மிகவும் அரியவையாக இருந்தன. மேரியின் வீட்டில் வேதாகமம் இல்லை, அவர் கிராமத்தில் ஒரே ஒரு வேதம் இருந்தது, அது மேரியின் பக்கத்து வீட்டுக்காரருக்கு சொந்தமானது. மேரி வேதாகமம் வாசிக்க விரும்பும் நேரங்களில் அவர் கனிவுடன் மேரியை வாசிக்க அனுமதித்தார்.

மேரி விலைமதிப்பற்ற வேத வார்த்தைகளை வாசிக்க அமர்ந்தபோது, வேதம் வாசிக்க வேண்டும் என்ற ஆர்வம் அவளுக்கு அதிகரித்தது. அவள் தனக்குச் சொந்தமாக ஒரு வேதத்தை வைத்து, அதை கரங்களில் ஏந்தி, தான் விரும்பும் நேரங்களில் எல்லாம் அதை வாசித்து தனது இதயத்தில் அவைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று விரும்பினார்.

ஆனால் ஒரு ஏழை பெண்ணான மேரி எப்படி இவ்வளவு விலையுயர்ந்த பொருளை வாங்க முடியும்? அந்தக் காலத்தில் ஒரு வேதத்தின் விலை ஒரு குடும்பத்தால் வாங்க முடியாத அளவிற்கு அதிகமாக இருந்தது.

இருப்பினும், மேரி உறுதியுடன் இருந்தார். 9 வயதிலேயே, அவர் தனது வாழ்க்கையை மாற்றும் ஒரு முடிவை எடுத்தார். அவர் கொஞ்சம் கொஞ்சமாக தன்னால் இயன்ற அளவுக்கு பணம் சேமிக்கத் தொடங்கினார். ஆறு வருடங்கள் ஓய்வின்றி உழைத்து, வேலைகளைச் செய்து, நபர்களுக்கு உதவிசெய்து அவள் சம்பாதித்த சிறு நாணயங்களைத் தனியாக எடுத்து வைத்தார்.

இறுதியில், மேரி 15 வயதாகும்போது, அவள் போதுமான அளவுக்கு பணத்தைச் சேமித்திருந்தாள். ஆனால் அப்போது அவளுக்கு வேறு ஒரு சவால் இருந்தது. மேரி வீட்டிலிருந்து 26 மைல் (சுமார் 42 கிமீ) தூரத்தில் இருந்த பாலா என்ற நகரமே அவளுக்கருகில் வேதாகமம் வாங்குவதற்கான இடமாக இருந்தது. மேரி வேதாகமம் வாங்கவேண்டுமெனில், அவள் ஒரு நீண்ட பயணத்தை மேற்கொள்ள வேண்டியதாயிருந்தது.

ஒரு நாள் அதிகாலையில், மேரி வெறுங்கால்களுடன் நடக்க ஆரம்பித்தார். கற்கள் நிறைந்த அந்த பாதையானது அவருடைய கால்களுக்கு கடினமானதாக இருந்தது. எனினும் மேரி தனது இருதயத்தின் நம்பிக்கை மற்றும் தீர்மானத்தில் உறுதியாக இருந்து தனது பயணத்தை தொடர்ந்தாள்.

அவள் பாலா நகரத்தை சென்று சேரும் வரையிலும் அநேக மலைகள் மற்றும் பள்ளத்தாக்குகளை கடந்து தொடர்ந்து பல மணிநேரங்கள் நடந்து சென்றாள். பாலா நகரத்தில் சுவிசேஷத்தை பரப்புவதில் மிகவும் நன்கு அறியப்பட்டிருந்த Rev. தாமஸ் சார்லஸ் என்பவரின் வீட்டிற்கு அவள் சென்றாள்.

மேரி தனது கதையை சொல்லி, தான் மிகவும் கஷ்டப்பட்டு சேமித்து வைத்திருந்த பணத்தைக் கொடுத்தபோது Rev. சார்லஸ் அவர்கள் மிகவும் அதிகமாக இருதயத்தில் தொடப்பட்டார்கள். அவரிடம் ஒரு சில வேதாகமங்களை இருந்தன. எனினும் மேரி ஒரு வேதாகமம் பெறுவதை அவர் உறுதி செய்தார். மேரி முதன் முதலாக தனது கரங்களில் வேதாகமத்தை ஏந்திகொண்டு இருந்தபோது அவளுடைய முகத்தில் மகிழ்ச்சியின் கண்ணீர் வழிந்தோடியது. அவளுடைய கனவு அன்று நிறைவேறியது அவள் தனது வேதாகமத்துடன் வீட்டிற்கு திரும்பினாள். அவள் வாசிக்க, ஆராய்ச்சி செய்ய மற்றும் வாழ்நாட்களில் அவைகளை தன் இருதயத்தில் பாதுகாக்க, அந்த வேதாகமம் அவளது விலையேறப்பெற்ற பொக்கிஷமாக அவளுக்கு இருந்தது.

மேரியின் கதை இத்துடன் முடிவடையவில்லை அவளுடைய தீர்மானம் மற்றும் வாஞ்சை, Rev. தாமஸ் சார்லஸ் அவர்கள் ஒரு முடிவை எடுக்க அவரை உந்தித் தள்ளியது. அவர் மேரியின் கதையை மற்றவர்களிடம் பகிர்ந்துகொண்டார். மிக விரைவிலேயே அது அனைவரிடமும் வேதாகமம் இருக்க இருப்பதை உறுதி செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் ஒரு இயக்கமாக மாறியது. இதற்குப் பின் ஒரு சில வருடங்கள்

.........அடுத்த பக்கம்

பரிசுத்த வேதாகமத்தை நாம் வாசித்து தியானிக்கும்போது, இந்த உலகில் தேவனுடைய ஜனங்களுக்கான அவருடைய சித்தத்தையும், அவருடைய திட்டத்தையும் நாம் கண்டுகொள்கிறோம்.

கழித்து 1804 ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் மற்றும் வெளிநாடு வேதாகம சங்கம் நிறுவப்பட்டது. ஒரு வேதாகமத்தை சொந்தமாக வாங்குவதற்கு 26 மைல்கள் வெறுங்கால்களுடன் மேரி ஜோன்ஸ் நடந்து சென்றார். அவள் தேவனுடைய வார்த்தையின் மதிப்பை அறிந்திருந்தபடியால் ஆறு வருடங்கள் அதற்காக பணம் சேமித்து வைத்தார். இன்று நம்மில் பெரும்பாலானோர், வேதாகமம் பெற இத்தகைய தியாகங்களை செய்யவேண்டிய தேவையில்லை. இன்று நாம் நம் வீடுகளில், நமது அலைபேசிகளில், பல கணக்கற்ற மொழிகளில் வேதாகமங்களை உடையவர்களாக இருக்கிறோம். ஆனால் நாம் மேரி செய்தது போல வேதாகமத்தை பொக்கிஷமாக கருதுகிறோமா? சர்வதேச வேதாகம வாசிப்பு நாளை கொண்டாடும் இவ்வேளையில் மேரியின் கதை வேதாகமத்தை வாசிக்கவும், ஆராய்ந்து பார்க்கவும் மற்றும் அதன்படி வாழவும் நம்மை ஏவும்படி விட்டுக் கொடுப்போமாக. பரிசுத்த வேதாகமம் வெறுமனே ஒரு புத்தகம் அல்ல என்பதை நாம் நினைவில் கொள்வோம். அது தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தை ஆகும். அது நமது கால்களுக்கு தீபமாகவும் பாதைக்கு வெளிச்சமாகவும் இருக்கிறது.

மேரி ஜோன்சின் கதை அவளுடையது மாத்திரம் அல்ல, அது நம்முடையதும் ஆகும். வேதாகமம் மீதான அவளுடைய அன்பு, கடவுளின் வார்த்தைக்கான நமது சொந்த உறுதிப்பாட்டைப் புதுப்பிக்கவும், அதன் செய்தியை இன்னும் அதன் ஒளிக்காக ஏங்கும் உலகத்துடன் பகிர்ந்து கொள்ளவும் நம்மை அழைக்கிறது.

## கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 13 மற்றும் வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 13 இல் கேட்கப்பட்ட வினாக்களுக்கான சரியான பதில்கள்

### வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்: 13

➡ இடமிருந்து வலம்
1. தேவசமாதானம் (3:15)
2. சமாதானம் (1:20)
3. அன்பு (3:14)
14.சிலுவை (2:15)

⬅ வலமிருந்து இடம்
9. தீகிக்கு (4:7)
11.வசனம் (4:6)

⬇மேலிருந்து கீழ்
1. தேவகோபாக்கினை (3:6)
3. அறிவு (2:3)
4. மாற்கு (4:10)
7. நிம்பா (4:15)
12. ஆணி (2:14)
13. கனி (1:10)

⬆ கீழிருந்து மேல்
5. மீட்பு (1:14)
6. லூக்கா (4:14)
8. கிறிஸ்து (3:11)
10.போராட்டம் (2:1)

### விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 13

1) 1 தெசலோனிக்கேயர் 5:8
2) 1 தெசலோனிக்கேயர் 2:12
3) 1 தெசலோனிக்கேயர் 3:8
4) 1 தெசலோனிக்கேயர் 5:17
5) 1 தெசலோனிக்கேயர் 4:7
6) 1 தெசலோனிக்கேயர் 4:16
7) 1 தெசலோனிக்கேயர் 2:7
8).அத்தேனே 3 - 1
9).மக்கெதோனியா 1 - 7
10) அகாயா 1 - 7

நாம் உயிர்வாழ்வதற்கு சுவாசிப்பது எவ்வளவு அவசியமானதோ அதே போல நம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு பரிசுத்த வேதாகமம் அவசியமானது. நம் வாழ்க்கைக்கு தேவனுடைய வார்த்தையை விட மிகவும் அத்தியாவசியமானது என்று எதுவும் இல்லை. - ஜாக் W. ஹேவர்ட்


# கொர்நேலியு -முதல் புறஜாதி கிறிஸ்தவர்

## (அப்போஸ்தலர் 10)

கொர்நேலியு செசரியாவில் இருந்த ஒரு ரோம நூற்றுக்கு அதிபதியானவர். அவரும் அவரது குடும்பமும் தேவனுக்குப் பயந்தவர்கள். அவர் தேவையுள்ளவர்களுக்கு தாராளமாக கொடுத்து, தினமும் தேவனிடம் ஜெபம் செய்துவந்தார்.

ஒரு பிற்பகல், ஒரு தேவதூதர் அவருக்கு தோன்றி, யோப்பாவுக்கு ஆட்களை அனுப்பி தோல் பதனிடுகிறவனாகிய சீமோனின் வீட்டிலிருந்து பேதுருவை அழைத்து வரும்படி கட்டளையிட்டார். கொர்நேலியு மூன்று ஆட்களை யோப்பாவுக்கு அனுப்பினார். அடுத்த நாள், அவர்கள் அந்த ஊரை அடைந்தனர்.

அந்த நேரத்தில், பேதுரு மேல்வீட்டுக்கு சென்று ஜெபம் செய்துகொண்டிருந்தார். அப்போது நாலு மூலைகளும் கட்டப்பட்ட ஒரு பெரிய துப்பட்டியைப் போன்ற ஒரு கூடு பூமியில் இறக்கப்படுவதை அவர் கண்டார். அதில் பல்வேறு வகையான விலங்குகள், ஊர்வன மற்றும் பறவைகள் இருந்தன. பிறகு ஒரு குரல் அவரிடம், "பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி" என்றது. பேதுரு தான் அசுத்தமான எதையும் சாப்பிட்டதில்லை என்றார். அந்தக் குரல் மீண்டும், "தேவன் சுத்தமாக்கியதை நீ அசுத்தம் என்று கூறாதே" என்றது. இது மூன்று முறை நடந்த பிறகு, அந்தக் கூடு மீண்டும் வானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.



அதற்குப் பிறகு உடனடியாக, அந்த மூன்று ஆட்கள் வீட்டுக்கு வந்து தங்கள் நோக்கத்தைத் தெரிவித்தனர்.

அடுத்த நாள், பேதுருவும் மற்றவர்களும் அந்த ஆட்களுடன் செசரியாவை நோக்கிப் புறப்பட்டனர். கொர்நேலியு அவர்களை வரவேற்றார். அவர் தன் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் பலரை ஒன்று சேகரித்திருந்தார். பேதுரு அவர்களுக்கு சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொண்டிருக்கும் போது, பரிசுத்த ஆவியானவர் அந்த புறஜாதியார் மீது இறங்கினார். அவர்கள் பல பாஷைகளை பேசி கடவுளை துதிக்கத் தொடங்கினர். பின்பு பேதுருவும் மற்ற விசுவாசிகளும் அவர்கள் அனைவருக்கும் ஞானஸ்நானம் கொடுத்தனர்.

**பாடங்கள்:**

- தேவனை நேசித்து, ஜெபம் செய்து, தேவைப்படுவர்களுக்கு உதவுங்கள்.
- பாகுபாட்டை விட்டுவிட்டு, தேவன் கட்டளையிடும் போதெல்லாம் அவருக்குக் கீழ்ப்படியத் தயாராக இருங்கள்.

**– சகோ. பீட்டர் ஏ.ஆர். பாலக்காடு, கேரளா.**


ஆசிரியர் குழு

1. பேதுரு தேவதாசன்
2. அற்புதராஜ் சாமுவேல்
3. ஜோ. இ. ஆ. ஈஸ்டர் ராஜ்
4. ஏ. ஆர். பீட்டர்
5. டெ. டென்சிங்
6. டார்வின் நேசகுமார் அ
7. ஷோபா தானியேல்
8. ஜோசஃபீன் ஷைனி பால்
9. கேதரின் சுஜி


கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். இந்த வசனமானது உங்கள் விருப்பங்களை எல்லாம் தேவன் நிறைவேற்றுவார் என்பதை அல்ல, அவர் தமது விருப்பத்தை உங்கள் இருதயத்தில் விதைப்பார் என்பதைக் குறிக்கிறது. - ஜான் மெக்ஆர்தர்

# GODependence சமூக ஊடக தளங்கள்

## GODependence YouTube Channel

GODependence தமிழ் சேனல் 1.2K சந்தாதாரர்களையும் 265 வீடியோக்களையும் எட்டியுள்ளது .

CLICK HERE https://youtube.com/@godependencetamil







## GODependence WhatsApp Channel

இது தமிழில் GODependence இன் அதிகாரப்பூர்வ whatsapp சேனல்.

தினமும் வேதாகமம், வேதவாசிப்பு குறித்த மேற்கோள்கள் மற்றும் அவ்வப்போது வேதவாசிப்பு சவால்கள் குறித்த மற்றும் பிற அறிவிப்புகள் பெற விரும்பினால், நமது தமிழ் சானலை follow பண்ணுங்கள்... நன்றி.




CLICK HERE https://whatsapp.com/channel/0029Va8tCqzC6ZvpLu3JBj3R

## GODependence வேதவாசிப்பு சவால்கள் தொடர்பு எண்கள்:

பல்வேறு மொழிகளில் நடைபெறும் வேத வாசிப்பு சவால்களுக்காக GODependence பின்வரும் தொடர்பு எண்களை பயன்படுத்துகிறது.

நீங்கள் எந்த மொழியில் வேதவாசிப்பு சவாலில் சேர விரும்புகிறீர்களோ, அதற்குரிய எண்ணில் தொடர்பு கொண்டு குழுவில் சேரலாம்.

- தமிழ் - +965 6596 2559
- ஆங்கிலம் - +91 95255 95265
- பிற மொழிகள் - +91 99628 34944

பரிசுத்த வேதாகமத்தைப் பற்றி அல்ல, பரிசுத்த வேதாகமத்தையே வாசியுங்கள். பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தை ஆகும், பரிசுத்த வேதாகமம் மட்டுமே தேவனுடைய வார்த்தை. - R. A. டோரி

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

30 நவம்பர் 2025 அன்றுடன் முடிவடைந்த GODependence வேதவாசிப்பு சவால்களில் வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்





















விடாமுயற்சியுடன் வேதாகமத்தை வாசிப்பதன் மூலம், உங்கள் மனதை வேத வசனங்களால் நிரப்பி வைத்துக்கொள்ளுங்கள். அப்போது அதன் மதிப்பையும் ஆற்றலையும் விரைவில் கண்டுபிடிப்பீர்கள். - ஜே சி ரைல்

## சாட்சி - சகோதரி. ஜெப செல்வி ★★★★★

கர்த்தருக்கு ஸ்தோத்திரம். என் பெயர் ஜெப செல்வி. நான் திரு.வி.கா நகரில் வசிக்கிறேன். முதலாவது என் தேவனுக்கு நன்றியை செல்லுகிறேன். GODependence Group ல் பணியாற்றுகின்ற அனைவருக்கும் ஸ்தோத்திரம். நான் கிறுஸ்துவ குடும்பத்தை சேர்ந்தவள். என் கனவர் இந்து குடும்பத்தை சார்ந்தவர். என் கணவர் குடும்பம் ஞானஸ்தானம் எடுத்து சபைக்கு போகிறார்கள். நான் எத்தனையோ முறை வேதத்தை வாசிக்க முயற்சி செய்துள்ளேன். ஆனால் முடியவில்லை. GODependence Group மூலமாக 5 முறை வேதத்தை வாசித்து முடித்துள்ளேன். இந்த 2025 டிசம்பர் மாதம் வந்தால் 6வது முறையாக முடிக்க போகிறேன். அதற்கு உறுதுனையாக இருந்த தேவனுக்கும் GODependence Group க்கும் நன்றிகளை தெரிவிக்கிறேன். வேதத்தில் தெரியாத புரியாத வசனங்கள் வார்த்தைகள் இருக்கும். உடனே குறுஞ்செய்தி மூலமாக அவர்களுக்கு தெரிவிப்பேன். உடனே அவர்களும் எனக்கும் விளக்கத்துடன் தெரியப்படுத்துவார்கள். அதற்காக தேவனை துதிக்கிறேன்.

நான் உங்களிடம் ஒரு சாட்சியை பகர விரும்புகிறேன். என்னால் கொஞ்ச நேரம்தான் உட்கார்ந்து படிக்க முடியும். படுத்து கொண்டு படிப்பேன். காரணம்... (என்னுடைய Spinal Cord Bulge ஆகிவிட்டத) எனக்கு டாக்டர் ஆப்ரேஷன் பண்ண வேண்டும், 2024 மார்ச்-க்குள் பண்ண வேண்டும், வலது கை வலது கால் செயலிழந்து விடும் என்று சொன்னார்கள். நான் வேதத்தில் உள்ள வசனங்களை வைத்து ஜெபிக்க ஆரம்பித்தேன். ஜெபத்திற்கு பதில் கிடைத்து, இப்போழுது உட்கார்ந்து வேதத்தை வாசிக்கிறேன். வேலைகளை செய்கிறேன். கிராம ஊழியத்திற்கு குடும்பமாக போகிறோம். வேதத்தில் வாசிக்கிறோம் பெலபடுத்துகிற கிறுஸ்வினாலே எல்லாவற்றையும் செய்ய பெலன் உண்டு. வாக்குதத்தின் தேவன் என்னை பெலப்படுத்தினார். ஆகவே நாம் அனைவரும் வேதத்தை படிப்போம் தேவ ஆசீர்வாதங்களை பெறுவோம். GODependence Group க்கு என் மனமார்ந்த நன்றி சொல்கிறேன்.

## சகோதரி. கிஃப்டா அருமைநாயகம் ★★★★★

Praise the Lord 🙏 Gifta Arumainayagam. Trichy.

என் குடும்பம் கிறிஸ்துவ குடும்பம். சிறுவயது முதல் வேதம் வாசித்து வசனங்களை மனப்பாடம் செய்ய பழக்கப்படுத்தப் பட்டோம். இதுவரை 17 முறை முழுவேதாகமத்தை வாசித்து முடித்தேன். என் வயது 70. GODependence வேதவாசிப்பு சவால் மூலம் 12 முறை வாசித்தேன். Praise be to God. வேதவாசிப்பினால் என் ஜீவியம் கர்த்தரோடு நெருக்கமானது. என் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்டது. சுகவீனங்களிலும் சோர்வான நேரங்களிலும் தேவகிருபையால் வேதத்தை சரியான நேரத்தில் வாசித்து முடித்தேன். GODependence வேதவாசிப்பு அட்டவனை தடையில்லாமல் சரியாக படித்து முடிக்க சுலபமாக இருந்தது.

வேதவாசிப்பு இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற ஒவ்வெருவருக்கும் அனுதினமும் அவசியமான போஜனம். ஆவி ஆத்துமா சரீரம் கிறிஸ்துவுக்குள்.நிலைத்திருக்க செய்கிறது. எனக்கு இந்த வேத வாசிப்பை கொடுத்த GODependence ministry க்கு நன்றி.🙏🏻

## சாட்சி - சகோதரி. எம்.ஜான் ஃப்ளோரா ★★★★★

PRAISE THE LORD 🙏🏻.

Respected GODependence சகோதர சகோதரிகளுக்கு என்னுடைய நன்றிகளும் வணக்கங்களும்🙏🏻.

என்னுடைய பெயர்: M. John Flora. நான் இந்த GODependence Ministries கொடுத்த ஊக்கத்தினாலும், கர்த்தருடைய பெரிதான கிருபையினாலும் இதுவரை 2023ல் தொடங்கி 9 முறை வேத புத்தகத்தை வாசித்து முடித்துள்ளேன். ஒரு வருடத்தில் உலகப் பிரகாரமாக எத்தனை எத்தனை பணிகளை செய்து முடிக்க திட்டமிட்டு, அதை செய்து முடிக்கிறோம். அதேபோல வேதாகம வாசிப்பை ஏன் நீங்கள் தேர்ந்தெடுக்க கூடாது என்று ஒரு பாஸ்டர் என்னிடம் கேட்டது தான் என்னை கர்த்தருக்கு நேராய், கர்த்தரை என் கண்முன்னே நிறுத்தி, இந்த வேதாகம வாசிப்பு திட்டத்தில் பங்கு பெற்று வாசிக்க காரணமாய் இருந்தது. தொடர்ந்து வாசிக்க உதவியது. கர்த்தர் மணவாளன் நாம் மணவாட்டி. உலகின் உத்தமமான உன்னதமான ஒரு உறவுதான் இந்த மணவாளன் மனவாட்டி உறவு.

அன்பு அதிகரிக்க அறிதல் அவசியம், அது பைபிள் மூலமே கிடைக்கும் என்ற பொன்மொழி என்னை இன்னும் அதிகமாக வேதத்தை வாசிக்க தூண்டுகிறது. ஆகவே நான் தொடர்ந்து வேதத்தை படிக்கிறேன். கர்த்தர் என்னோடும் உங்கள் அனைவரோடும் இருந்து நம்மை நடத்த ஜெபிக்கிறேன்.

நன்றி. அன்புடன்

M. John Flora.

## சாட்சி - சகோதரி. இஸ்பெல்லா ★★★★★

இஸ்பெல்லா, பாராஞ்சி. ஆதி கிறிஸ்தவள்.

ஒருமுறை GODependence வேதவாசிப்பு சவால் மூலம் பைபிள் வாசித்தேன். நாங்கள் கடை வைத்துள்ளோம் என்னால் வேதம் வாசிக்க முடியவில்லை ஆனாலும் நான் தினமும் கடவுளுக்கு என்று நேரத்தை ஒதுக்கி வெற்றிகரமாக வாசித்து முடித்தேன்.

வேதத்தை வரிசையாக கொடுத்தால் படிப்பதற்கு பிரியமாக இருக்கும். மாற்றி மாற்றி படிப்பதால் ஆகமங்களை புரிந்து கொள்ள கடினமாக இருந்தது. ஆகமங்களை தொடர்ந்து படிக்க ஆர்வமாக இருக்கும்.

வேதம் வாசிக்கும் பொழுது கடவுள் என்னிடம் பேசுவது போல் உள்ளது. கட்டாயமாக சிறுபிள்ளை முதல் முதியவர்கள் வரை வேதத்தை கட்டாயமாக வாசிக்க புரிந்து கொள்ள அதன்படி நடக்க நான் விரும்புகிறேன்.

இயேசுவுக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.

தேவனுடைய வார்த்தையானது இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை உடையதாக இருக்கிறது. அதனுடன் ஆயிரம் கோடி ரூபாய் பட்ஜெட் போட்டி போட முடியாது. - ஜோசப் ஸ்டோவெல்

# 2 தெசலோனிக்கேயர்

**எழுதப்பட்ட காலம் :** கி.பி. 51- கி.பி. 52
**நிகழ்வுகள் நடைபெற்ற காலம் :** கி.பி. 51- கி.பி. 52
**நூலின் ஆசிரியர் :** அப்போஸ்தலனாகிய பவுல்
**புத்தக வகை :** கடிதங்கள்

## நூல் அறிமுகம்

- தெசலோனிக்கருக்கு எழுதிய முதலாம் கடிதம் பல சந்தேகங்களை உருவாக்கிற்று. அவை குறிப்பாக இயேசு கிறிஸ்து மீண்டும் வருதலைப் பற்றியனவாக இருந்தன. இந்நிலையில் பவுல் இந்த கடிதத்தை எழுதினார்.

## சூழலும் நோக்கமும்

- தெசலோனிக்காவில் உள்ள திருச்சபையில் கர்த்தருடைய நாளைப் பற்றி இன்னும் சில தவறான கருத்துக்கள் இருந்தன. அது ஏற்கனவே வந்துவிட்டதாக நினைத்த அவர்கள் தங்கள் வேலையை நிறுத்தினர். அவர்கள் மோசமாகத் துன்புறுத்தப்பட்டனர். தவறான எண்ணங்களைத் துடைக்கவும் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கவும் பவுல் இக்கடிதத்தை எழுதினார். தெசலோனிக்கருக்கு எழுதிய முதலாம் கடிதம் பல ஐயப்பாடுகளை உருவாக்கிய நிலையில், அக்கடிதத்தில் ஆறுமுறை கிறிஸ்துவின் வருகை பற்றிப் பேசப்பட்டிருந்தது. அது விரைவில் நிகழும் என அக்கடிதத்தில் சொல்லப்பட்டிருந்தது. இந்தப் பின்னணியில் இறுதி வருகை ஏற்கெனவே நிகழ்ந்து விட்டதென்று சிலர் நினைத்தனர்; வேறு சிலர் அது நெருங்கிவந்துவிட்டது எனக் கருதிச் சோம்பித் திரிந்தனர். இக்கருத்துக்களை மாற்றிட இரண்டாம் கடிதம் தெசலோனிக்கருக்கு எழுதப்பட்டது இது கி.பி. 52-ஆம் ஆண்டுக்கும் 100-ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இது எழுதப்பட்டது.

## முக்கிய வசனங்கள்

2 தெச 1:6-7, 2 தெச 2:13, 2 தெச 3:3, 2 தெச 3:10

## புத்தகத்தின் சுருக்கம்

- பவுல் தெசலோனிக்காவில் உள்ள திருச்சபையை வாழ்த்துகிறார், மேலும் அவர்களை உற்சாகப்படுத்துகிறார். அவர்கள் கர்த்தருக்குள் என்ன செய்கிறார்கள் என்று அவர்களைக் குறித்து அவர் கேள்விப்பட்டதற்காக அவர்களைப் பாராட்டுகிறார். மேலும் அவர் அவர்களுக்காக ஜெபிக்கிறார் (2 தெச 1:11-12). அதிகாரம் 2ல், கர்த்தருடைய நாளில் என்ன நடக்கும் என்பதை பவுல் விளக்குகிறார் (2 தெச 2:1-12). பவுல் அவர்களை உறுதியாக நிற்க ஊக்குவிக்கிறார், மேலும் சுவிசேஷத்தின்படி வாழாத சும்மா இருக்கும் மனிதர்களிடமிருந்து விலகி இருக்குமாறு அறிவுறுத்துகிறார் (2 தெச 3:6). இறுதி வருகை ஏற்கெனவே நிகழ்ந்துவிட்டதென்ற அவர்கள் எண்ணத்தை மாற்ற, ஆண்டவரின் இறுதி வருகை நிகழும்முன் கிளர்ச்சி ஏற்படும் என்றும், கேட்டின் மகன் தோன்றுவான் என்றும், அவன் கிறிஸ்துவுக்கு எதிராய் இருப்பான் என்றும கடித ஆசிரியர் கூறுகிறார். இவ்வருகையை முன்னிட்டுத் தெசலோனிக்காவில் பலர் வேலை செய்யாமல் சோம்பித் திரிந்தனர். அவர்கள் நிலையாய்இருந்து தாங்கள் கற்றுக் கொண்ட சாத்தியங்கள் வாழப் பணிக்கிறார் ஆசிரியர். வேலை செய்யாது சோம்பித் திரிவோர் உழைத்து உண்ணுமாறு கட்டளை இடுகிறார் பவுல்.

## புத்தகத்தில் இயேசுகிறிஸ்து

- பவுல், இறுதிக் காலம் பற்றிய தனது உரையில் பல பழைய ஏற்பாட்டு பத்திகளைக் குறிப்பிடுகிறார், இதன் மூலம் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை உறுதிப்படுத்தி சமரசம் செய்தார். இக்கடிதத்தில் இறுதிக் காலத்தைப் பற்றிய அவருடைய போதனைகளில் பெரும்பாலானவை தானியேல் தீர்க்கதரிசி மற்றும் அவருடைய தரிசனங்களை அடிப்படையாகக் கொண்டவை. 2 தெச 2:3-9 இல், "பாவத்தின் மனிதன்" (தானியேல் 7-8) பற்றிய தானியேலின் தீர்க்கதரிசனத்தை அவர் குறிப்பிடுகிறார்.

## நடைமுறைப் பயன்பாடு

- 2 தெசலோனிக்கேயர் புத்தகம் இறுதி நேரத்தை விளக்கும் தகவல்களால் நிரப்பப்பட்டுள்ளது. சும்மா இருக்காமல் இருப்பதற்காக உழைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்துகிறது. 2 தெசலோனிக்கேயர்களில் சில பெரிய ஜெபங்களும் உள்ளன, அவை இன்று மற்ற விசுவாசிகளுக்காக எவ்வாறு ஜெபிக்க வேண்டும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கின்றன.

## நூலின் அமைப்பு

1) முன்னுரை 1:1 - 2
2) புகழாரம் 1:3 - 12
3) கிறிஸ்துவின் வருகை குறித்து அறிவுரை 2:1 - 17
4) கிறிஸ்தவ வாழ்வுக்குப் பரிந்துரை 3:1 - 15
5) முடிவுரை (இறுதி வாழ்த்து) 3:16 – 18

GODDependence

தொகுப்பு: சகோ. டார்வின் நேசகுமார் ஏ.

தேவனுடைய வார்த்தை எனும் நங்கூரத்திலிருந்து நாம் துண்டிக்கப்படுவோமெனில், நாம் விடுதலையைப் பெறமாட்டோம். மாறாக, நாம் நமது தனிப்பட்ட உணர்வுகளுக்கும் உலகின் பிரபலமான போக்குகளுக்கும் அடிமைகளாகிவிடுவோம். - ஜான் பைபர்

# சர்வதேச வேதவாசிப்பு தினம்

## International Day of Bible Reading (IDBR) – 16 டிசம்பர்

**கடந்த வருட அனுபவங்களின் அடிப்படையில் கீழ்க்கண்டவைகளை 16 டிசம்பர் அன்று சர்வதேச வேதவாசிப்பு தினத்திற்கான செயல்படுகளாக நாங்கள் பரிந்துரைக்கிறோம்.**

### ஒரு தனிநபராக நான் சர்வதேச வேதவாசிப்பு தினத்தில் எப்படி கலந்து கொள்ளலாம்?

- டிசம்பர் 16 அன்று சற்று நேரம் ஒதுக்கி வேதவசனங்களை வாசிக்க, தியானிக்க அதிலிருந்து தனிப்பட்ட வாழ்க்கைக்கு குறிப்பெடுக்க, அதற்கு உங்களை அர்ப்பணிக்க நேரம் செலவழிக்கலாம்.
- ஏதாவது ஒரு குறிப்பிட்ட வேத வசனத்தை அல்லது வேத பகுதியை மனனம் செய்யலாம்.
- இதனை போட்டோ எடுத்து, உங்கள் WhatsApp Status, Facebook (முகநூல்), இன்ஸ்டாகிராம் போன்றவைகளில் பகிரலாம்.
- *நீங்கள் மனப்பாடம் செய்யும் வசனங்களை வீடியோவாக ஒப்புவிப்பதையும் அவ்விதமே நீங்கள் உங்கள் சமூகவலைத் தளங்களில் பகிரலாம்.
- உங்கள் நட்பு வட்டாரத்தில் தேவைப்படும் யாருக்காவது பரிசுத்த வேதாகமத்தை பரிசளிக்கலாம்.
- அவற்றை அவ்விதம் சமூக வலைத் தளங்களில் பகிரும் போது #சர்வதேசவேதவாசிப்புதினம் #IDBR2025 போன்ற ஹேஷ்டேக்குகளை (Hashtags) பயன்படுத்துங்கள். அப்போதுதான் ”சர்வதேச வேதவாசிப்பு தினம்” பற்றிய செய்தியானது பலரையும் சென்றடையும்.
- இதன் மூலம் உங்கள் நட்பு வட்டத்தில் இருக்கும் அனைவருக்கும் இது குறித்து விவரங்கள் தெரியவரும்.

### குடும்பம், சபை மற்றும் குழுக்களாக இதனை நாம் அனுசரிக்க, 16 டிசம்பர் அன்று நாம் என்ன செய்யலாம்?

- குழுவாக கூடி அமர்ந்து, ஒரு குறிப்பிட்ட வேத பகுதிகளை அல்லது வேதாகமத்தின் புத்தகங்களை ஒருவர் மாறி ஒருவராக சத்தமாக வாசிக்கலாம்.
- மனப்பாட வசனங்களை ஒப்புவிக்கும் நிகழ்ச்சியை அல்லது போட்டிகளை நடத்தலாம்.
- வேதாகம வினாடி வினா போட்டிகளை நடத்தலாம்.
- பரிசுத்த வேதாகமம் அதன் வரலாறு, பின்னணி மகத்துவங்கள், தனிநபர்களில் சமுதாயத்தில் அதன் தாக்கம் குறித்து பேசும் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யலாம்

தேவனுடைய வார்த்தையை வாசிப்பது இருதயத்திற்கு சமாதானத்தைத் தருகிறது. அதில், சகல இருளுக்குமான ஒரு வெளிச்சத்தையும், மரணத்தில் ஜீவனையும், நம் ஆண்டவர் திரும்பவும் வருவதைப் பற்றிய வாக்குத்தத்தத்தையும், மற்றும் நித்திய மகிமைக்கான நிச்சயத்தையும் நாம் கண்டுகொள்கிறோம். - டி.எல்.மூடி

# சர்வதேச வேதவாசிப்பு தினம்

## International Day of Bible Reading (IDBR) – 16 டிசம்பர்

- மேற்கண்ட இவைகளில் ஒன்றோ அல்லது அதற்கும் மேற்பட்ட நிகழ்வுகளை நேரடி (In Person) நிகழ்ச்சியாகவோ அல்லது நேரலை (Online) நிகழ்ச்சியாகவோ நடத்தலாம்.
- நேரடி நிகழ்ச்சியாக நடத்தும் பொழுது அவற்றை போட்டோ அல்லது வீடியோ வடிவில் உங்கள் தனிப்பட்ட மற்றும் சபை, குழுக்களின் சமூக வலைத்தள பக்கங்களில் பகிரலாம்.
- இவ்விதம் நேரடி மற்றும் நேரலை நிகழ்வுகளை சமூக வலைத்தள பக்கங்களில் பகிரும் போது, #சர்வதேசவேதவாசிப்புதினம் #IDBR2025 போன்ற ஹேஷ்டேக்குகளை (Hashtags) பயன்படுத்துங்கள். அப்போதுதான் "சர்வதேச வேதவாசிப்பு தினம்" பற்றிய செய்தியானது பலரையும் சென்றடையும்.

**16 டிசம்பர் 2025 அன்று சர்வதேச வேதவாசிப்பு தினத்தில் GODependence Team ஆக நாங்கள் என்ன செய்ய இருக்கிறோம்?**

- நமது வேதவாசிப்பு சவால்கள் நடைபெறும் 10 மொழிகளிலும் தனித்தனியான Zoom கூடுகைகள்.
- 10 மொழிகளிலும் அந்தந்த மொழியில் உள்ள பரிசுத்த வேதாதமத்தை வரலாறை விளக்கும் GODependence கருத்தரங்குகள்
- தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தனித்தனியாக ஆன்லைன் மெகா வேதாகம வினாவிடைப் போட்டி.
- தங்கள் சமூக வலைத் தள பதிவுகளை பகிர்வதற்கென WhatsApp பயன்படுத்துபவர்களுக்காக IDBR வாரத்தில் 10 மொழிகளிலும் செயல்படும் தற்காலிக வாட்சாப் குழுக்கள்.
- 16 டிசம்பர் அன்று தங்கள் பிறந்தநாளைக் கொண்டாடுபவர்களுக்கு சர்வதேச வேதவாசிப்பு தின ஹேஷ்டேக்குகளுடன் (#) வாழ்த்துக்களை பகிர்ந்துகொள்தல்.
- 10 மொழிகளிலும் தொடர் வேதவாசிப்பு நிகழ்வை (Bible Readathaon) நடத்துதல்.
- GODependence வேதவாசிப்பு சவால்கள் நடைபெறும் 10 மொழிகளிலும் தேவையிலுள்ள நபர்களுக்கு முழுவேதாகமத்தை வழங்குதல்.

கீழ்க்கண்ட IDBR சமூக ஊடக இணைப்புகளின் மூலம் இணைந்திருங்கள்.

IDBR2025 Facebook Page: tinyurl.com/IDBR-Dec16-FB

IDBR2025 Instagram: tinyurl.com/IDBR-Dec16-Insta

IDBR2025 YouTube: tinyurl.com/y8pn8ecr

IDBR2025 X Page: tinyurl.com/3hmbydjs

ஒருவர் இரட்சிக்கப்படுகிறார் அல்லது இரட்சிக்கப்படுவதாக சொல்கிறார் என்ற உண்மையின் அடிப்படையில் இயேசுவைப் பாவ இரட்சகர் என்று நம்பி நீங்கள் உங்கள் விசுவாசத்தைக் கட்டி எழுப்பவில்லை. மாறாக, ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் உங்கள் விசுவாசத்தை உடையவர்களாக இருக்கிறீர்கள். இதிலே நீங்கள் உறுதியாக இருக்கிறீர்கள். - ஜான் அலெக்ஸாண்டர் டூவி

# IDBR 2025 - GODependence கருத்தரங்குகள்




https://www.youtube.com/watch?v=ix0z6o72Sxw&t=2s




https://www.youtube.com/watch?v=L4wr3YRlybk&t=1075s




https://www.youtube.com/watch?v=kYQ07zX0QKI&t=263s




https://www.youtube.com/watch?v=U76vpyTjw_I&t=2606s





https://www.youtube.com/watch?v=43PBs3lmQqw




https://www.youtube.com/watch?v=Y5q4zVYclXw&t=73s

மரித்துப் போன ஆத்துமாக்களை உயிர்பெறச் செய்வதற்கு பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தும் மாபெரும் கருவி தேவனுடைய வார்த்தை. - டி.எல் மூடி




https://www.youtube.com/watch?v=43PBs3lmQqw




https://www.youtube.com/watch?v=uJOTkNL5sks

## சிறுவர் வேதவாசிப்பு 2025-26 - CBRC

சிறுவர் வேதவாசிப்பு சவால்கள் (CBRC) 2025-26 -இன் முதல் பருவத்திற்கான மனன வசனப் போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெறுபவர்களுக்கான பட்டியல் மற்றும் அவர்களின் வீடியோக்களும் இங்கே கொடுக்கப்படுகின்றன.




https://youtu.be/rOVq956Cz-U




https://youtu.be/U6Ny5VwKhI4




https://youtu.be/xkMwC5nBSDI




https://youtu.be/tYQ5sRBJ604




https://youtu.be/RkSBNeHR3NO




https://youtu.be/M2Dqk-CmDG8




https://youtu.be/vNMtkxb1_CY




https://youtu.be/g1zK6pJyn2c




https://youtu.be/WZolk3VjSks

பரிசுத்த வேதாகமத்தை தியானம் செய்யாமல் வாசிப்பது என்பது உணவை மென்று சாப்பிடாமல் அப்படியே விழுங்குவதற்கு முயற்சிப்பதைப் போன்றதாகும்.

# IDBR 2025 - Zoom கூடுகைகள்




https://www.youtube.com/watch?v=8sivwS5ZtIM




https://www.youtube.com/watch?v=zJgJEhOUPws





https://www.youtube.com/watch?v=Mycb9l7z6Bg




https://www.youtube.com/watch?v=Mycb9l7z6Bg




https://www.youtube.com/watch?v=W9vzT1SX-7I




https://youtube.com/live/3TufiKxWmZI?feature=share




## நமது GODependence குழுவின் சார்பாக உங்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

தேவனுடைய மனதில் என்ன இருக்கிறது என்பது வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது; எனினும், பரிசுத்த ஆவி எனும் கண்ணாடி இல்லாமல் நாம் அதில் எதையும் பார்க்க முடியாது. - தாம்ஸ் மன்டன்

# விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 14

குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

**வேதப்பகுதி: 2 தெசலோனிக்கேயர்**

1



2



3



4



5



6



7



8



9



10




https://forms.gle/2A7wRQ994N3Z2PaTA

- மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 25/12/2025 க்கு முன்பதாக அனுப்பவும்.
- சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

## கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 13மற்றும் வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 13 இல் பங்கு பெற்று சரியான பதில்களை அனுப்பிய நபர்களின் பெயர்கள்

### வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்: 13

- ஜினிஷா கி வி
- ஆர் ஜோசபின்
- அ.ஜாய்ஸ் செல்லத்துரை
- இ.மார்கிரேட் ரோஸ்லின்
- அமுதா ஜெகன்
- டி.ரேணுகா
- டி நிர்மலாதேவி
- கிறிஸ்டி ஜோசப்
- பி.விஜிலா
- மணி மாலா ச.
- கிருபா ஜான்சன்
- ரைச்சல் அமுதவல்லி

### விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 13

- டி நிர்மலாதேவி
- ஜினிஷா கி வி
- ஏ.ஜாய்ஸ் செல்லத்துரை
- அமுதா ஜெகன்
- டி. ரேணுகா
- கிறிஸ்டி ஜோசப்
- பி.விஜிலா
- ரைச்சல் அமுதவல்லி
- மணி மாலா சா

செய்தித்தாளை வாசிக்கிறவர் உலக நடப்பை அறிந்துகொள்கிறார். பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கிறவர் அவை ஏன் நடைபெறுகின்றன என்பதை அறிந்து கொள்கிறார்.

- பெயர் அறியப்படாதவர்

## GODependence நிகழ்வுகள்

### IDBR 2025 முன்னிட்டு நடைபெற்ற தொடர் வேதவாசிப்பு நிகழ்வுகள் (Bible Readathons - IDBR 2025)

1

Marathi: https://www.youtube.com/watch?v=-62a6fLOl-E&t=536s


Hindi: https://www.youtube.com/watch?v=FrX9XkltsIY

Malayalam: https://www.youtube.com/watch?v=2Fn1jl3SiE4

Bengali: https://www.youtube.com/watch?v=wXPHV6ffX7s

Tamil: https://www.youtube.com/watch?v=P_Te7WqPF8M

English: https://www.youtube.com/watch?v=e94-rQtZCro




2

### IDBR 2025 நிகழ்வுகள் - நவம்பர் / டிசம்பர் 2025




நமது வேத வாசிப்பு சவால்கள் நடைபெறும் பத்து மொழிகளிலும் சர்வதேச வேத வாசிப்பு தின நிகழ்வுகளை முன்னெடுக்க வேண்டும் என திட்டமிட்டு ஆரம்பித்த முயற்சிகள் தேவனுடைய கிருபையால் 9 மொழிகளில் நிறைவேற தேவன் கிருபை செய்தார். 8 மொழிகளில் அந்தந்த மொழி வேதாகமத்தின் வரலாறு குறித்த GODependence கருத்தரங்கங்கள், 6 மொழிகளில் தொடர் வேதவாசிப்பு (Bible Readathon) நிகழ்ச்சிகள் 7 மொழிகளில் Zoom கூடுகைகள் என தொடர்ச்சியாக பல நிகழ்வுகள் நடந்து வருகின்றன.

### வேத தியான குழுக்கள் (BMG) - பயிற்சி அமர்வுகள்

3

**தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால், நாம் மீண்டும் தொடங்க திட்டமிட்டிருந்த வேத தியானக் குழுக்கள் (BMG) இதுவரையும் தொடங்கப்படவில்லை.**

நமது குழுவினர் எதிர்வரும் சர்வதேச வேதவாசிப்பு தின (IDBR) நிகழ்வுகளின் ஆயத்தங்களில் இருப்பதால், “தேவனுடைய வார்த்தைகளை தியானிப்பது எப்படி” என்ற தலைப்பில் நவம்பர் 2025 மாதத்தில் நடைபெறுவதாக இருந்த பயிற்சித் திட்டமும் செயல்படுத்தப் படவில்லை.



**2026 ல் இவைகளை ஆரம்பிக்க விரும்புவதால், இதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.**

FOLLOW US!

GODependence வேதவாசிப்பு சவால்கள்

+965 6596 2559

GODependence - தமிழ்

GODependence - தமிழ்

GODependence - தமிழ்

GODependence

X GODependence

தொடர்பு முகவரி:
**GODependence**
105 Y/1A, நல்ல சமாரியன் நகர்,
வள்ளியூர் - 627117,
தமிழ்நாடு, இந்தியா.

பரிசுத்த வேதாகமத்தில் உள்ள ஒரு வசனமானது நான் வாசித்த எல்லா புத்தகங்களைக் காட்டிலும் அதிகமாக எனக்கு மிகுந்த ஆறுதலைத் தந்தது. - இம்மானுவேல் கான்ட்